உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-ஐப்பசி. மலர்: எ.

ஓம்

"குடம்பை"
என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக் குப்பாயம்.*

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருப்பெயரைக் கேளாதவர் தமிழராவரோ? அவர் இயற்றியருளிய திருக்குறளைக் கல்லாதவர் கற்றவராவரோ? ஒப்புயர்வற்ற இவ்வருமருந்தன்ன நூல் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பல நாட்டாராலுங் கொண்டாடப்பெற்று வருகிறதென்பது அறிஞர்பலரும் அறிந்ததொன்றே. இவ்வரிய நூலுக்கு உரையிட்டார் பலராவர்.

'தருமர் மணக்குடியர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர்—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்'

என்னும் பண்டைச் செய்யுளான் அறியக்கிடக்கும் பதின்மரே பண்டை யுரையாளராவர். இவ்வுரைகளுள் **மணக்குடியார்** உரையும், **பரிமேலழகர்** உரையுமே நமக்கு இன்று முழுநூல்களாகக் கிடைத்துள்ளன. அடியும் முடியும் அற்றுப்

* காலஞ்சென்ற—திருவாளர், B. S. இரத்தினவேலு முதலியாரவர்கள் B. A. (சென்னை) எழுதியது.

பாணவாய்ப்பட்டு அழிவுற்றுப் பெயர்விளங்காப் பழைய உரையேடுகள் சிலவுங் கிடைத்துள்ளன. இவ்வுரைகளுளெல்லாம் திட்பநுட்பஞ்செறிந்து செந்தமிழ்ச் செழுமை மலிந்து விளங்குவது 'பரிமேலழகர் விருத்தி'யே யாகும்.

இனி, நச்சர் என்பது நச்சினார்க்கினியரென்று கொண்டு, அவரும் குறளுக்கு ஓர் உரையிட்டாரென்றும், அவர் அந்நூலுள் 'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே—உடம்போடுயிரிடை நட்பு' என்னுங் குறளுக்குக் கூடும் புள்ளு மென்று பொருள் கண்டனரென்றும், அவ்வுரையைக் கண்டித்து ஆசிரியர் பரிமேலழகர் முட்டையுங் குஞ்சு மென்று பொருள் உரைத்திட்டாரென்றும், அங்ஙனம் உரைத்தபோது உடனிருந்து கேட்ட உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் அவ்வுரை நயத்தைமெச்சி அவரைத் தழுவிக்கொண்டனரென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர். இக்கதைக்கு ஆதாரம் எங்குளதென்று அவர் கூறினருமல்லர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் போசராசன் காலத்துக்கு முற்பட்டவர்; ஆசிரியர் பரிமேலழகரோ அவ்வரசன் காலத்துக்குப் பிற்பட்டவராவர். இங்ஙனம் இரு வேறு காலத்திருந்த இருபெரும்புலவரை ஒரு காலத்தே கூடச் செய்து, ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளும்பெரும்பேற்றைத் தருதற்கு ஒரு பொருட்டினையும் படைத்த பிற்காலத்துப் புலவரது புனைந்துரையின் திறத்தை என்னென்று கூறுவது! ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையின் இருபதுபாட்டு ஆகிய இவற்றிற்கே உரையெழுதினரென்பது "பாற்கடல் போலப் பரந்த நன்னெறி.........தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை.........உரையிடை யிட்ட காண்டிகை யுரைத்தும்,...... ஒருபது பாட்டு முணர்பவர்க் கெல்லாம்-உரையற முழுதும் புரைபட வுரைத்தும்.........கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்(கு).........இன்னுரை பொருள்பெற விளம்பியும்....... சிந்தாமணி.........வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும், ...குறுந்தொகை-யிருபது பாட்டிற்......கேற்ப வுரைத்தும்" என்னும் நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுளானும்,

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைந்நான்குஞ்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே."

என்னும் பண்டைவெண்பாவானும் அறியப்படுகின்றது. ஆதலான், அவர் திருக்குறளுக்கு உரைவகுத்தாரென்பது எங்ஙனம் பொருந்தும்? இது நிற்க.

இனிக் 'குடம்பை' என்னுங் குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகர் கூறியஉரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் வியக்கத்தக்க பெருமை யுடைத்தா என்பதைச் சிறிது ஆராய்வாம். அவர் கூறும் உரை வருமாறு:- "முன் றனியாதமுட்டை தனித்துக்கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம்வந்துழிப் பறந்துபோன் தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு." "தனித்தொழிய வென்றதனான், முன்றனியாமை பெற்றாம். அஃதாவது கருவுந்தானும் ஒன்றாய்ப்பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல். அதனால் அஃது உடம்பிற்குவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற் போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையேகூறினார், பறந்துபோதற் றொழிலான் உயிரோடொப்புமை யெய்துவது அதுவேயாகலின். நட்பென்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதலுணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண்மாறாகலின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பிலவென்பதறிக. இனிக் குடம்பையென்பதற்குக் கூடென்றுரைப்பாருமுளர். அது புள்ளுடன் றோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும் உடம்பிற்குவமையாகாமை யறிக."

இவ்வுரையில் ஆசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்ற சொல்லுக்கு முட்டையென்று பொருள்கூறி, முட்டையினோட்டை உடலுக்கும் வெளிவந்தபார்ப்பை உயிர்க்கும் உவமை காட்டிக், கூட்டினுள் புள் பன்முறை புகுதலினாலும், உடலும் உயி

ரும் போலக் கூடும்புள்ளும் உடன்றோன்றுமையானும், கூடும் புள்ளும் என்ற உவமை பொருந்தாதென மறுத்திட்டார்.

இனிக் 'குடம்பை' என்றசொல் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் காலத்தும் அவர்க்கு முற்பட்ட காலத்தும் எப்பொருளில் வழங்கப்பட்டுளதென்பதே முதற்கண் ஆராயவேண்டுவது. ஆசிரியர் வள்ளுவனார் கடைச்சங்கத் திறுதிக் காலத்திற்குச் சிறிது முன்னர் அஃதாவது முதனூற்றாண்டிலிருந்தவராதலால், கடைச்சங்கத்து நூல்களில் அம்மொழிக்கு எப்பொருள் காணப்பட்டுளதோ அப்பொருளே. ஆசிரியர் கூறிய குடம்பைக்கும் பொருளாகும். 'மீனார் குருகின் மென்பறைத் தொழுதி-குவையிரும் புன்னைக் குடம்பை சேர (௪௦), 'மூரியம் பாஅரை-யலங்க லஞ்சினைக் குடம்பை புல்லென' (௧௧௩), 'முண்மிடை குடம்பைச்—சேவலொடு புணராச் சிறுகரும் பேடை' (௨௭௦), 'கற்றுரிக் குடம்பைக் கதநாய்' (௩௮௧) என்று அகநானூற்றிலும், 'மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்—தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்' (௯௧), 'இருங்கழி—யிரையார் குருகி னிரைப்பறைத் தொழுதி—வாங்குமடற் குடம்பைத் தூங்கிருட் டுவன்றும்' (௧௨௩), 'குடம்பைப்—பெடைபுணரன்றில்' (௧௫௨), 'பழனப் பாகன் முயிறுமுசு குடம்பை' (௧௮௦), 'பேடை-நெறிகிளரீங்கைப் பூவி னன்ன-சிறுபல் பிள்ளையொடு குடம்பை கடிதலின்' (௧௮௧), 'ஓங்குமணை லுடுத்த நெடுமாப் பெண்ணை-வீங்குமடற் குடம்பைப் பைதல்வெண் குருகு' (௧௯௯) 'தடந்தாட் டாழைக் குடம்பை' (௨௭௦) 'மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்-துணைபுணரன்றில்' (௩௦௩), 'கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய' (௩௩௮), 'முதுக்குறைத்தூஇ முயன்றுசெய் குடம்பை' (௩௯௯), 'புள்ளினங் குடம்பையுடன்சேர்' (௩௮௨), 'கவைமுட் கள்ளி—முளரியங் குடம்பையீன்றிளைப் பட்ட-வயவுநடைப் பேடை' (௩௮௪) என்று நற்றிணையிலும், 'பெண்ணைக்—கொழுமடல் விழைத்த சிறுகோற் குடம்பைக்—கருங்கா லன்றில்' (௩௦௧) என்று குறுந்தொகையிலும், 'பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை' (௯௯) என்று ஐங்குறுநூற்றிலும், 'குடம்பை மடலொடு புட்கலா மால்' (௩௧௮—௩௭௨. புது) என்றுபழமொழியிலும் 'குடம்பை' என்ற

சொல் ‘கூடு’ என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுளது. முட்டை என்ற பொருளில் வழங்கப்பட்ட இடம் ஒன்றாயினும் எனக்குப் புலப்படவில்லை. கடைச்சங்க காலத்தே தோன்றியதும், கல்லாடனார், ஔவை இவர்களாற் பாடப்பெற்ற ‘அம்பற்கிழவன் தேனூர்ச் சேந்தன் அருவந்தை’ எவத் திவாகரரால் தொடுக்கப்பட்டதும், ஆசிரியர் நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் இவர்களால் ஆளப்பட்டதும், சங்ககாலத்தே வழங்கிவந்த சொற் பொருள்களை யெல்லாம் தொகுத்துக் கூறுவதுமாகிய சேந்தன் திவாகரத்தில், ‘கூட்டின் பெயர்–குடம்பை, பஞ்சரம், கட்சி கூடாகும்.’ (தொகுதி-௫),“ பறவை முட்டையின் பெயர்--அண்டமுஞ் சினையும் அவற்றின் முட்டை” (தொகுதி-௩) என்று கூறியிருத்தலால், அக்காலத்தே ‘குடம்பை’ என்ற சொல்லுக்கு ‘முட்டை’ என்ற பொருளில்லை யென்பது நன்கறியக்கிடக்கின்றது.

நாயனார்க்குப்பிற்பட்டு ஆசிரியர்பரிமேலழகர்காலம்வரையினுங்கூடக் ‘குடம்பை’ என்றசொல் ‘கூடு’ என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுளது. ஆசிரியர்நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகம் சூ. அ.) உரையில் ‘புள்ளெல்லாம் குடம்பைநோக்கி யடங்கு பெயரவும்’ என்றும், பெருங்குறிஞ்சியுரையில் (அடி-௨௨௮) ‘பறவைகள் குடம்பைக்கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே’ என்றும், கலித்தொகையுரையில் (௧௧௯) ‘புட்கள் தம்பார்ப்புக்களை நினைத்துக் குடம்பை சேர’ என்றும் கூறியிருத்தலே அதற்குறுசான்றாம். ‘வீநறை குடம்பையுந் தானெனுங் கொள்கைத்தே’ (திருவிளையாடற்புராணம். இந்திரன்பழிதீர்த்தபடலம். ௩௩), ‘செறிந்த மண்ணின்-குடம்பையுட் புழுமுன் னாதுங் குளவி’ (கைவல்லியம், தத்துவவிளக்கப் படலம். ௧௮) ‘செறிகின்ற புள்ளல்லவே கூடு’ . . . குடம்பையும் பறவையும்போல (சசிவன்னபோதம். ௪௬) என்று ஆசிரியர்பரிமேலழகர்க்குப்பிற்பட்டெழுந்தநூல்களிலும் அச்சொல் கூடு பொருட்டாய்வழங்கப்பட்டுளது. என்சிற்றறிவுக்கெட்டியவரையில் அச்சொல் முட்டைஎன்றபொருளில் வழங்கப்பட்டஇடம் புலப்படவில்லை. பிற்காலத்தில் அச்சொல் ஓரோவிடங்களில் முட்டைஎன்றபொருளில் வழங்கப்பட்டுமிருக்கலாம். ஆயின்,

அவை சண்டைஆராய்ச்சிக்கேலாதனவாகும். இனிப்பிங்கலந்தை
நிகண்டில் குடம்பை என்றசொல்லுக்கு முட்டைஎன்றபொரு
ளுங் காணப்படுதலால் நாயனர் குறளுக்கு அந்நூற்சூத்திரம்
மேற்கோளாகாதோ வெனின், ஆகாது. என்னை? பிங்கலந்தை
ஆசிரியர்பரிமேலழகர்க்குப் பிற்பட்டுத் தோன்றியதொன்றாயின
மையின் அது சங்ககாலத்துக்குச் சுமார் பத்துநூற்றாண்டுக்குப்
பிற்பட்டதாகும். சங்கநூல்களின் இலக்கண முடிபுகளைத்
தெரித்தற்குத் தொல்காப்பியத்தையொழித்து நன்னூலினின்று
விதிகாட்டுவது எங்ஙனம் பொருத்தமுடையதாகாதோ, அங்
ஙனமே, சங்கநூற்சொற்பொருளைத்தெரித்தற்குத் திவாகரத்தை
யொழித்துப் பிங்கலந்தையினின்று விதிகாட்டுவது பொருந்தாத
தாகும். ஆசிரியர்பரிமேலழகர் தாம்கொண்டகருத்திற்கிசையக்
'குடம்பை' என்றசொல்லுக்கு 'முட்டை' என்ற ஒருபுதிய
பொருளைக் கற்பித்து வழக்காற்றில் விட்டுவிடவே, அவர்க்குப்
பிற்பட்டுவந்த பிங்கலந்தையார் தமக்குமுன் வழங்கிவந்த ஒரு
சொற்குரிய பலபொருள்களையெல்லாந்திரட்டி ஒருநிகண்டுகோத்
தெடுத்தாரேயொழியத் தேவர் குடம்பைக்கு முட்டையென்று
பொருள்கூறினரல்லர். மண்டலபுருடர் 'வள்ளுவன்' என்ற
சொல்லுக்கு 'நிமித்திகன்' ('வருநிமித் திகன்பேர் சாக்கை
வள்ளுவ னென்று மாகும்') என்று பொருள்கூறினரென்று
கொண்டு, 'வள்ளுவன் சாக்கையெனும்பெயர் மன்னர்க்-குள்படு
கருமத்தலைவர்க்கொன்றும்' என்றுகூறிய திவாகரர்காலத்தும்
அச்சொல்லுக்கு அப்பொருள்கோடுமென்றுகூறுதல் எங்ஙனம்
பொருந்தாதோ அங்ஙனமே மேலையதுமாகும். இஞ்ஞான்று
ஒருவன் ஒருநிகண்டு நோக்கப்புகுவானாயின் ஒருசொல்லுக்கு
இன்றுகாறும் வழங்கிவரும் பலபொருள்களையும் எடுத்துக்காட்ட
வேண்டியது முறைமையாயினமையின், அதுகொண்டு முற்காலத்
துச்சொல்லுக்குப் பிற்காலத்துப்பொருளை அமைத்துக்காட்டு
வறு, மாட்டின்முன் கலப்பைகட்டி ஏருழத்தொடங்கினவன்
அறிவை யொக்கும். ஆதலால் பிங்கலந்தையிற் கூறப்பட்ட
முட்டைஎன்றபொருள் சங்ககாலத்தில்வழங்கிவந்த குடம்பை
என்றசொல்லுக்குப் பொருளாகாது. ஆகவேநாயனர் 'குடம்பை'
என்ற சொல்லைக் கூடென்றபொருளிலேயே அமைத்தாரென்ப

தும், ஆசிரியர் பரிமேலழகர் தம்கருத்துக்கியைய அச்சொல்லுக்கு முட்டையென்ற புதியபொருளைக்கற்பித்தாரென்பதும் நன்கு போதருகின்றன.

இனி, இரண்டாவதாக ஆராயவேண்டியது நாயனுர்க்கு முற்பட்டகாலத்தும் பிற்பட்டகாலத்தும் உடலுக்கும் உயிர்க்குமுள்ளதொடர்பை எவ்வுவமையால் ஆன்றோர்கள் விளக்கியுள்ளார்களென்பதே. ஆராய்ந்தமட்டில் திருவருணிலையினின்ற பெரியோரும் மற்றையோரும் உடலைநீத்தேகுமுயிர்க்குக் கூட்டைவிட்டேகும் இளம்புள்ளையே உவமித்துள்ளார்களன்றி முட்டையினின்றுவெளிவரும் ‘பிள்ளை’ யைக் கூறினர்களில்லை. ‘முரியம் பராஅரை–பலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்–புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு–மெய்யிவ ணொழியப் போகியவர்—செய்வினை மருங்கிற் செலீஇயரென் னுயிரே’ என்று கல்லாடனர் அகநானூற்றிலும் (௧௧௩), ‘கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி,—வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே—சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல-யாக்கை தமர்க்கொழிய நீத்து’ என்று சமணமுனிவர் நாலடியாரிலும் (௩௦), ‘கான லாம்பர மேகட் கிறந்ததோர் வானி லாப்பொருளே யிங்கொர் பார்ப்பெனப்-பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப் பூணு மாறறி யேன்புலன் போற்றியே.’ என்று உண்மையாவுணர்ந்த பெரியார் திருவாசகம் திருச்சதகத்திலும் (கைம்மாறு கொடுத்தல். ௪௪), ‘உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை-எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்–கொழுந்தசை மேய்ந்தும் ஒழுக்குவிழுங் குடில்’ என்று திருவருள் கைவரப்பெற்ற பட்டினத்தடிகள் கோயிற்றிருவகவலிலும் (மூன்றாவது), ‘தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்–கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே’ என்று சிவஞானச்செல்வரான திருமூலயோகிகள் திருமந்திரத்திலும் (யாக்கைநிலையாமை. ௨௫), ‘ஓம்பினேன் கூட்டை வாளா’ என்று தவராசசிங்கமாகிய அப்பமூர்த்திகள் திருவொற்றியூர் திருநேரிசையிலும், ‘துயர்க்கெலாங் கூடாய தோற்குரம்பை புக்கு’ என்று நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதியந்தாதியிலும் (௨௭), ‘மறைகின்ற வென்பு நரம்போடிறைச்சி யுதிர மச்சை பறைகின்றதோல்போர்குரம்பை’ என்று

சேரமான்பெருமாணாயனார் பொன்வண்ணத் தந்தாதியிலும் (எ௨), 'பொய்க்கூடுகொண்டு புலம்புவனே வெம்மிறைவர்-மெய்க் கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே' என்றுதாயுமானார் பைங்கிளிக் கண்ணியிலும் (௪௨), 'கூடுவிட்டுப் போயினபின் னேது புரிவீர் ரெங்கே குடியிருப்பீ ரையோ' என்றுஇராமலிங்க சுவாமிகள் அருட்பா ஆறுவது திருமுறை உறுதிகூறலிலும் (௨) 'கூடுவிட்டிங்-காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்-பாவி கா ளந்தப் பணம்' என்று நல்வழியிலும் (௨௨) 'அறிகின்ற பொருளென்று மறிவானின் வேறே யானுளிவ் வுறை நானென்ன லாமோ-செறிகின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே செடமான வுடலின்னில் வேறென்று தெளியே' (உடலினையும் உயிரினையும் குடம்பையும் பறவையும் போலப் பகுத்தறி யென்றது) என்று சசிவன்னபோதத்திலும் (௪௬) கூறியிருத்தலே அதற்குப் போதிய சான்றாம். தமிழ் மொழியிலன்றி மற்ற மொழிகளிலும் உடலுக்கும் உயிர்க்குமுள்ள நட்புக்குக் கூட்டுக்கும் புள்ளுக்கு முள்ள நட்டையே உபமானமாகக் காட்டியுள்ளார்களென்று அம் மொழிகளில் வல்லார் கூறுகின்றனர். 'When the bird has flown away from it, one cares no longer for the nest. So when the bird of life has flown away, no one cares any longer for the carcase.' என்று ஸ்ரீ இராம கிருஷ்ணபரம அம்சர் தம்முடைய வங்காள இதோப தேசத்தில் (௨அஎ) கூறியுள்ளார். இவையன்றியும் அரசன் விக்கிரமாதித்தனும், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும் ஓர் உடலி லிருந்து மற்றோர் உடலுட் புகுந்தபோது, கூடுவிட்டுக் கூடுபாய்ந் தார்களென்று சொல்லும் உலக வழக்கினையும் யாவரும் கேட் டுள்ளோம். இவ்வரிய சித்தியை அங்ஙனமே கூறுதல் மரபென் பதைக் 'கூடுவிட்டுக் கூடுபாயுங் கொள்கையுடைய குருவின்' என்று பாம்பாட்டிசித்தர் தமது பாடலில் (௧௧) கூறுதலானும் அறியலாம் ஒருவன் இறந்தவிடத்துக் 'கூட்டைவிட்டுப் பட்சி பறந்து போய்விட்டது' என்று உலகத்தார் கூறுகின்றனரே யொழிய 'முட்டையினின்று குஞ்சு வெளியே போய்விட்டது' என்று கூறுவார் ஒருவரையும் கேட்டிலேம். ஏனெனின் உபமேயத்திற்குப் பொருந்தியதும், இயற்கைக் கொத்ததும் அவ்வுவமானமேயாதலின் அதனை யாண்டும் என்றுங் கூறுவர்.

யான் ஆராய்ந்தவளவில் முட்டையுங் குஞ்சுமென்ற உபமானம் பரிமேலழகர் உரையைத் தவிர்த்து மற்றெங்குங் காணப்படவில்லை. ஆதலான் உடலை நீத்தேகும் உயிருக்குக் கூட்டை நீத்தேகும் புள்ளையே உவமித்தல் ஆன்றோர் வழக்கென்பதும் அதனையே ஆசிரியர் வள்ளுவனார் கூறினாரென்பதும் யாவரும் நன்கறியக் கூடியவையே.

குறிப்பு :—சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. மணி. **திருநாவுக்கரசு முதலியாரவர்கள்** அனுப்பிய இக்கட்டுரையில் ஒருபகுதி அச்சிட்டபின், இது செந்தமிழ் இருபத்தொன்றாந்தொகுதி எழாம்பகுதியில் முன்னரே வெளிவந்திருப்பது உணர்ந்தேம். இதுகாறும் அச்சிட்ட பகுதியினும், இனியச்சிடவிருந்த பகுதியினும் சிற்சில சிறுவேறுபாடுக ளிருப்பினும், முடிந்த முடிபு ஒன்றாகவேயிருக்கக் காண்டலின், பெரும் பயனின்மை கருதி, இம்மட்டில் நிறுத்திக்கொண்டாம்.

இதழாசிரியர்.

உ

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

பதினான்காம் ஆண்டு விழா நிகழ்ச்சி.

இவ்விழாச் சிறப்பினை நமது தமிழ்நாட்டு அரிய இதழ்கள் பலவும் முன்னரே வெளியிட்டுள்ளன. இவ்விதழ்கட்கு நம் சங்கத்தின் நன்றியறிவினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இவ்விழாச்சிறப்பினைப் **பொழில்** எடுத்துரைக்கும் கடப்பாடுடைமை நோக்கி ஈங்குச் சிறிது எழுதுகின்றோம்.

இவ்விழா, குரோதன ஐப்பசி, அ, கூ-ஆம் நாட்களில், சங்கக் கொட்டகையில், **பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்** தலைமையில் நிகழ்வுற்றது. விழாவிற்குரிய முன் அலுவல்கள் பலவும் திருச்சிராப்பள்ளி, தஞ்சை முதலிய இடங்களிலுள்ள அன்பர்கள் ஒருமித்து ஒழுங்குபெற அமைத்திருந்தனர். விழாநிகழும் கொட்டகை 'பொதியச் சாரலிலுள்ள தமிழ்த்தாயின் நாளோலக்க மன்றே' என ஐயுறுமாறு அணிபெற்று மிளிர்ந்தது. சங்க மாணவச்சிறாராகிய தொண்டர்கள் தங்கள் தலைவர்களுடன் யாங்கணும் பரந்து, வெளியூர் உள்ளூர்களிலிருந்து விழாவிற்கு வரும் அன்பர்கட்கு வேண்டும் நலங்களை உள்ளக் கனிவோடு உளுற்றி நின்றனர். சங்கக்கட்டிடங்களும், சங்கத்தலைவரவர்கள் இல்லமும் தமிழ்ப்புலவர்கள், தமிழன்பர்கள் கூட்டங்களால் தத்தம் தவப் பேற்றினை யடைந்து ஒளிர்ந்தன. எங்கும் தமிழ்மாட்சி! எங்கும் புலவர்காட்சி! எங்கெங்கும் 'தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார்—இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ'—நகுவார் ஈட்டம்! எங்கெங்கும் 'தமிழ்த்தாய் வாழ்க' 'தமிழ்த்தாய் வாழ்க' என ஆர்க்கும் மாணவர் கூட்டம்.! சுருங்கக்கூறின், அவைத்தலைவர் புகழுரையும் வாழ்த்துக்களும் கொண்டுள்ள வளைவுகள் மலிந்த வழிகளிலும், அறவுரைகளும் தமிழ்த்தாய்வாழ்த்துக்களும் பொறிக்கப்பெற்றுள்ள கொட்டகையிலும், ஏனைக்கட்டிடங்களிலும், ஆல

மர் மன்றம் முதலாகப் புதுமணல் பரந்த ஏனை மரநிழல் மன்றங் களிலும் நறுந்தமிழ்மணம் பரந்து விரிந்திருந்தது.

ஐப்பசி அ-சனி, மாலை உ௰ நாழிகை (2 மணி) க்கே அப் பெரிய விழாக்கொட்டகை சிறிதாகத் தமிழன்பர்கள் உள்ளும் புறமும் ஒருங்கு நெருங்கினராய்ச் சண்டினர். புலவரும் செல்வரு மாகிய பல்லோர் அவைத்தலைவரவர்களை, சங்கத் தலைவரவர்கள் இல்லிலிருந்து, வாச்சிய ஒலியும் மாணவர் வாழ்த்தொலியும் மல்க ஊர்வலமாக அழைத்து வந்தனர். ஓரிருகதிரும் ஒருங்கு கார் மீதிவர்ந்துவரின் ஒக்குமென்னுமாறு, அவைத்தலைவரவர்களும் சங்கத்தலைவரவர்களும் கார்மீதிவர்ந்து வந்துற, கடலொலியின் விஞ்சிய கையொலி, வாழ்த்தொலிகளினிடையே அவைத்தலைவர் அவர்கள் உயரிடத்தமர்ந்தனர்.

அதுபோது, அவையினை ஏறிட்டுப்பார்க்க, (கண்ணேறு படாதொழிக) புலவரும், செல்வரும், மாணவருமாகிய பெருங் குழாமொன்று தோன்றி, யாம் நாடோறும் புரிந்துவரும் உள்ளக் கோட்டையின் பேரெல்லையைத் தமிழ்த்தாயின் தண்ணருளாற் கண்ணுறக்கண்டு களிக்கப் பெற்றிருத்தல் காட்டிற்று. (ஆயினும் அதனைப் பெற்றதென்னை? ஆண்டு முழுவதும் அவ்வாறுவிழா மேவினன்றோ எமது உள்ளக்கோட்டை முற்றும் கைவரப்பெற்ற தாகும்! இதுநிற்க.) அப்பெருங்குழுவினுள் இத்துணைக்காலங் கடந்து இதனை யெழுதுங்கால் நினைவில் நிற்பார் சிலச்சிலரே. அவராவார்:-திருவாளர்கள் தஞ்சைத்தமிழ்க்கிழவர் இராவ்பகதூர் K. S. சீநிவாசபிள்ளையவர்கள், விரிவுரையாளர்கள், கல்லல் உயர்திரு. மணிவாசக சரணாலய அடிகள், கூடலூர் இராமசாமி வன்னியரவர்கள், சந்தானமையங்காரவர்கள், L. உலகநாதபிள்ளை யவர்கள், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், அ. பால சுப்பிரமணிய பிள்ளையவர்கள், ஊ. சா. வேங்கடராமையர் அவர்கள், சதாசிவப்பண்டாரத்தாரவர்கள், அ. பொன்னன்னுக் களத்தில் வென்றூர் அவர்கள், இலக்கணவிளக்க பரம்பரை சோம சுந்தரதேசிகரவர்கள், வே. முத்துசாமி ஐயரவர்கள், M.A., L.T.,

சா. சிதம்பர உடையாரவர்கள், கோவிந்தராச நாட்டாரவர்கள் B. A., L. T., சோமசுந்தர தேசிகரவர்கள், (திருவையாறு) கோவிந்தசாமிபிள்ளையவர்கள், அ. பூவராகம்பிள்ளையவர்கள், பெரியசாமிப்பிள்ளையவர்கள், இ. இராம. நடேசபிள்ளையவர்கள், (திருச்சி.) சிவகுருநாத பிள்ளையவர்கள், ஓ. என். அப்பாசாமி ஐயரவர்கள், சிதம்பர ஐயரவர்கள் (தஞ்சை) முதலிய தமிழறிஞர் களும், திருவாளர்கள் A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள் Bar-at-law (கார்க்கொடையாளர்), விரையாவாண்டையாரவர் கள் (பெருஞ்சோற்றுதியர்), வேங்கடாசலத் தேவரவர்கள், அறங் கூறவையத் தலைவர்களாகிய இராமசாமி சாஸ்திரிகள் (Sub-Judge) குப்புசாமி ஐயரவர்கள், (Munsiff) நாகநாத சாஸ் திரிகள், பார்த்தசாரதி ஐயங்காரவர்கள், க. நடராசன் அவர்கள் முதலிய வழக்கறிஞர்கள், மதுரை கோபால கிருட்டினக்கோனு ரவர்கள், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைத்தலைவரவர்கள், திருச் சிராப்பள்ளி தஞ்சாவூர் நாட்டாண்மை நகராண்மைக் கழகங் களின் உறுப்பினர்கள், நிலக்கிழவர்கள், திருச்சிராப்பள்ளி கும்ப கோணம் கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவர்கள் எனும் பற்பலராவர். நினைந்து விரிக்கிற் பெருகும். நிற்க.

அவைத்தலைவரவர்கள் உயரிடத்தமரவே, கூடலூர் இன்னி சைச் செல்வர் இராமசாமி வன்னியரவர்கள் தேனினுமினிய தீந்தமிழ்ப் பாடல்களாற் கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த் துக்கள் கூற ஏனை நிகழ்ச்சிகள் தொடங்கின.

வரவேற்பு.

சங்கத்தலைவரவர்கள், அவைத்தலைவரவர்கட்கு வரவேற்புக் கூறுங்கால், முன்னுரையாகச் சங்கத்தின் நோக்கங்களையும், அது இயற்றிவரும் அருந்தொண்டுகளையும், தமிழ்மக்கள் அதற்கு உதவிவரும் வகைகளையும், அன்னார் அதற்கு இன்னும் செயற் பாலவாய கடமைகளையும் சுருங்க விளங்கக்கூறி, இச்சங்கத்தே அவைத்தலைவரவர்கள் கொண்டுள்ள தனிப்பேரன்பினைக் காட்டி, அவர்கள் பெருமைகளை எடுத்துக்காட்டும் வரவேற்புச் செய்யு ளைத் தமக்காகத் தம்நண்பர் திருவாளர் இராமசாமி வன்னியரவர்

களைப் படித்துக்கொடுக்குமாறு வேண்டியமர்ந்தனர். அங்ஙனமே திருவாளர் வன்னியரவர்கள் இன்னிசையோடு இனிது பொருள் விளங்க இவ்விருமுறை படித்து அவையோர் வாழ்த்தொலியுடன் அளித்தனர். அவ்வாறே, சங்கமாணவச் சிறுவர் இருவர் பாடிய இனிய வரவேற்பு ஒன்றும் அன்னவரால் அவையோர் வாழ்த்தொலியினிடையே அவைத்தலைவருக்கு அளிக்கப் பெற்றது. இவ்விரு வரவேற்புச் செய்யுட்களும் அவையோர்க்கு அளிக்கப்பெற்றன. நமது பொழிலின் சேர்க்கையாக அவற்றை இவ்விதழில் வைத்துள்ளேம்.

அறிக்கை.

பின்னர், சங்க அமைச்சர் தாய்ச்சங்கம், கிளைச்சங்கங்களின் அமைச்சர்கள் எழுதிய அறிக்கையினைப் படித்தனர். இதனுள், கலாசாலைப் பகுதியைத் திருவாளர் நா. விசுவநாதையரவர்கள் படித்தனர். கலாசாலை வளர்ச்சியும், சொல்லதிகார உரையின் வேலைமுடிவும், தமிழ்ப்பொழில் வெளியீடும் குறித்தற்குரிய அருஞ்செயல்களாகும். இவ்வறிக்கையும் யாவர்க்கும் அளிக்கப் பெற்றது. பொழில் அன்பர்கள் விரும்பியெழுதின் இவ்வறிக்கை அனுப்பப்பெறும்.

முன்னுரை.

அதன் பின்னர், அவைத்தலைவரவர்கள் எழுதி அச்சிட்டருளிய முன்னுரையை இனிது படித்தனர். இம்முன்னுரையினை நம் பொழிலன்பர்கள் ஊன்றிப் படித்துமகிழும் கடப்பாடுடையர். இம்முன்னுரையினைப் படித்து யாம் அடைந்த வியப்பு, மகிழ்ச்சிகளை **முன்னுரையின் மதிப்புரை** யென ஈற்றிற் சிறிது எழுதியிருக்கின்றேம். அம்முன்னுரை இவ்விதழின் சேர்க்கையாக விருக்கின்றது.

பரிசு.

பின்னர், சங்கத்துத் தேர்ச்சி (பரீட்சை) களில் முதன்மையில்நின்ற சங்கமாணவர் முப்பதின்மேலாயவருக்கு, தேர்ச்சிப் பரிசு, கட்டுரைப் பரிசு, விரிவுரைப் பரிசு, அதிகாரப் பரிசு, திருக்குறட் பரிசு எனப் பல்வகையான பரிசுகளை, அவைத்தலைவர்

அவர்கள் வாழ்த்திக் கொடுத்தனர். இப்பரிசுகளை அளித்த நன் கொடையாளர்களாகிய திருவாளர்கள் சங்கத்தலைவரவர்கள், பள்ளியக்கிரகாரம் நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் (ஓர் பட்டு) நாராயணசாமி நாயுடவர்கள், T. N. சுப்பையா வஸ்தாது அவர்கள் ஆகியவர்கட்குச் சங்கத்தார் வாழ்த்து உரியதாகும்.

விரிவுரைகள்.

அப்பால், மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருவாளர் **ஆ. கார்மேகக் கோன்** அவர்கள் **பழந் தமிழ்ப்புலவரின் பெருந்தகைமை** என்னும் அரியவிரிவுரையை மேற்கொண்டு, தமது இயற்பெயரைக் 'காரணப்பெய' ராக்கிக் கொண்டதொடு, தாம் கூறவந்த பழம் புலவரின் பெருமை இக் காலத்துப் புலவராய தமக்கும் உளதாதலைக் குறித்தனர். இவ்வரிய விரிவுரையில், பண்டைப் புலவர்களின் அஞ்சாமை, மான முடைமை, ஒழுக்கமேம்பாடு, இடுக்கண் அழியாமை, ஒற்றுமை, பல்வேறு தொழில் நலங்கள், உண்மையுரைத்தல், உலகநன்மைக் குழைத்தல் முதலிய உயர்குணங்களைத்தமது அரிய நூலாராய்ச்சி வன்மையாற் பழைய சங்கநூற்களின் சான்றுகளைக் கொண்டு இனிது எடுத்து விளக்கினர். இவ்விரிவுரையில், பிற்காலத்தார் புலவர்கட்கு ஏற்றிய ஒழுக்கமின்மை, பொறாமை முதலிய இழிகுணங்கள் உண்மைப் புலவர்களை என்றும் சார்ந்ததில்லை, சார்வதில்லை யென்னும் உண்மையினை நன்கெடுத்துரைத்த திறம் பெரிதும் போற்றற்குரியதொன்றுயிற்று. இவ்வரிய விரிவுரையும் மற்றைச்சிறந்த விரிவுரைகளும் எழுத்துருப்பெற்று நம் பொழிலை அணிவிக்கும் எனும் எண்ணம் உடையேம்.

இதன் பின்னர், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருவாளர் **மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்**, 'மணி' 'மணி' என்றும், 'திருநாவுக்கரசு' 'திருநாவுக்கரசு' என்றும் அவையோர் கொண்டாடத் **திருவள்ளுவர்** என்றதோர் விரிவுரையை அவையோர் பலரும் மெய்ம்மறந்துநிற்க, இனிது எடுத்துரைத்தனர். இவ்வுயர் விரிவுரையில், திருக்குறள் தெவிட்

டாத திம்பாற் கடலன்னது எனவும், விலைவரம்பற்ற மணி எனவும், வடவிந்தியரும் ஐரோப்பியரும் ஓரோர் குறளை யுணர்ந்த வளவிலே இதன் பெருமையை யுணர்ந்து தத்தம் மொழிகளிற் பெயர்த்துப் போற்றிக்கொண்டனர் எனவும், திருக்குறட் கருத்துக்களை எடுத்தாண்டு பெரும்பேறு பெற்றூர்பலரெனவும், மரபு சமய நெறிகளில் பொதுநிலை காட்டும் செந்நூல் இஃதொன்றே யெனவும், முப்பாலுள் எப்பாலும் சிறந்ததே யெனவும், இதனை ஒக்குநூல் எங்கும் என்றும் இல்லையெனவும், இன்னனைய இதன் உயர்வுகள் பலவும் இவையிவை யெனவும் தெள்ளிதின் விரித்துரைத்தனர்.

நாடகம்.

அதன்பின்னர், எல்லாச்சுவைகளும் மலிந்து விளங்கும் முத்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்தெழுதியதும், சென்ற புரட்டாசி இதழில் வெளிவந்துள்ளதுமாகிய ஒரு சிறு பகுதியை, சங்கமாணவச் சிறுவர்கள் இன்னிசைப்பாடலும் தெளிந்த உரைகளும் கொண்டு, இன்பம், துயரம், நகை முதலிய சுவைகள் அவ்வப்போது கனிய, அவையோர் பேரின்பவெள்ளத்து மூழ்க இனிது நடித்துக் காட்டினர்.

முடிவில், அவைத்தலைவரவர்கள் விரிவுரை பொவ்வொன்றினையும் பாராட்டி, அவ்வப்பொருளில் தமது அரிய கருத்துக்களையும் ஆராய்ச்சிகளையும் சுருக்கியுரைத்தும், நாடகத்தின் சிறப்பினைப் பாராட்டி மகிழ்ந்து அச்சிறுவர்களை வாழ்த்தியும், அதனை அவ்வாறு நடாத்திக்காட்டிய இன்னிசைச் செல்வர் வன்னியபாவர்கள், கலாசாலையாசிரியர்கள் முதலோரைப் பாராட்டியும், அடுத்த நாட் காலையிலும் ஒரு கூட்டம்கூட விருப்பதைத் தெரிவித்தும் அமர, கடவுள் வாழ்த்துத் தமிழ்த்தாய் வாழ்த்துக்களுடன் முதல்நாள் விழா இனிது நிறைவேறியது.

இப்பால், உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பல்லாரோடுண்ணும் பெருமகிழ்வும், பல்லாரோடளவளாவிக் களித்தலாற் சிறுதுயிலும் உடையராக, இரண்டாம்நாள் விழாத் தொடங்கிற்று.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் பதினன்காம் ஆண்டு விழாக்காலத்தே எண்ணித்துணிந்த முடிபுகள்.

குரோதன, ஐப்பசி, கூ. (25-10-25) காலை நிகாழிகை (8மணி).

அவைத்தலைவர்:--பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்.

1. கோல்கோணுது தங்களைப்புரந்துவரும் மிகுமாட்சிதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்மன்னருக்கு இப்பெருங் கூட்டத்தார் தங்கள் கோப்பற்றுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தோர் :—அவைத்தலைவர் அவர்கள்.

2. இக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் புரவலர் திருவர்ளர் கீழையூர் சிவசிதம்பரம் பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைக்கு இப்பெருங்கூட்டத்தார் மிகவருந்தித் தம்வருத்தத்தை அவர்தம் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தோர் :—சங்கத் தலைவரவர்கள்.

வழிமொழிந்தோர்:—திரு. இராமசாமி வன்னியரவர்கள், கூடலூர்.

3. பலதுறைகளிலும் கற்றுத்துறைபோகியவரும், நம்தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் அணிபோல் விளங்கியவரும் ஆகிய திருவாளர். திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைக்கு இப்பெருங்கூட்டத்தார் மிகவும் வருந்தித் தம்வருத்தத்தை அவர்தம்குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தோர் :—அவைத்தலைவர் அவர்கள்.

4. இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்து ஆண்டுத்திருவிழாக் காலங்களிற்கூடிய பெரியோர்கள்வேண்டியவாறே தமிழ்மொழிக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை நிறுவுதற்பொருட்டு நமது மாகாண வளர்ச்சிநேறி அமைச்சர், திருவாளர் திவான் பகதூர் தி. நா. சிவஞானம்பிள்ளை B.A. அவர்களும் மற்றைப்

பெரியோர்களும் வேண்டிய நன்முயற்சிகளைச் செய்துவருதலை நோக்கி இப்பெருங்கூட்டத்தார் பெருமகிழ்வு எய்துகின்றனர். இந்நன்முயற்சி விரைவிற் கைகூடுமாறு தமிழராவார் ஒவ்வொருவரும் போதியஉதவிகளைச்செய்ய முன்வரவேண்டும் என்று அவர்களைப் பெரிதும் வேண்டிக்கொள்கின்றனர்.

முன்மொழிந்தோர் :—திரு. ஊ. சா. வேங்கடராமையர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

வழிமொழிந்தோர் :—T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

5. சென்னைப் பல்கலைக்கழகத்தில் நம்செந்தமிழ்த் தாய்மொழியானது தனக்குரிய முதலிடம் பெறுதவாறும், கட்டாயப்பாடமாகப் பயிற்றப்படாதவாறும் அங்கங்கே சிலசூழ்ச்சிகள் நடைபெற்றுவருதலைக் கேள்வியுற்று இப்பெருங்கூட்டத்தார் மனம்வருந்துகின்றனர். உண்மைத்தமிழன்பர்களை இச்சூழ்ச்சி வலையிற் சிக்காது தமிழ்மொழி ஆக்கத்திற்கு வேண்டுவனவெல்லாம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தோர்—பெரியசாமிப் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், திருச்சிராப்பள்ளி.

வழி மொழிந்தோர்—T. N. குருமூர்த்திப் பிள்ளையவர்கள்,
திருச்சிராப்பள்ளி.

6. சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழின் நிலைமையை மேம்படுத்துவதற்குரிய வழிகளை நாடிக் கோயமுத்தூர் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கொண்டுவந்திருக்கும் முடிபுகளைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மற்றைய உறுப்பினர்களும், முன்போலில்லாமல், முழுமனதுடன் ஒப்பிப்போற்றி நம் செந்தமிழ்மொழியின் உரிமையைக் கொடுக்கும்படி இப்பெருங்கூட்டத்தார் வேண்டிக்கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தோர்:-அருணசலம் பிள்ளையவர்கள் B. A.,
திருச்சிராப்பள்ளி.

வழிமொழிந்தோர்:—பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், திருச்சிராப்பள்ளி.

7. வடமொழியினும், நமதருமைச்செந்தமிழ்மொழியினும் நிரம்பிய புலமையும், தமிழ்மொழி தமிழ்ப்புலவர்களின் ஆக்கத்திற் கண்ணுங்கருத்துமாகவிருக்கும் அருமைக்குணமும் உடைய திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்களுக்கு மேலைச்சிவபுரிச்சன்மார்க்கசபையார், **பண்டிதமணி** என்னும் தக்கதோர் பட்டம் வழங்கியதுகுறித்து இவ்வவையோர் தங்கள்மகிழ்ச்சியையும் நன்றியறிவினையும் அச்சபையோர்க்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தோர்:—பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

வழிமொழிந்தோர்:—அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப் புலவர், சலகண்டபுரம்.

„ உயர்திரு. மணிவாசக சரணாலய அடிகள், கல்லல்.

„ R வேங்கடாசலம் பிள்ளையவர்கள், சங்க அமைச்சர்.

8. வித்வான் பரீட்சைக்குரிய முதற்படிப்பாகிய (Entrance) பிரவேச பரீட்சைக்குத் தமிழ்ப்பாடமாக 'வியாசம்' ஒன்றே குறிக்கப்பட்டுள்ளது. அது வித்துவான் வகுப்பிற் கேற்ற படித்தரமாக இராமையால் தக்கபாடங்கள் சேர்க்கப் பெறவேண்டுமென்று பாடக்கழத்தாரை இவ்வவையோர்கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

முன்மொழிந்தோர்:—S. சந்தானம் ஐயங்கார் அவர்கள், பண்டிதர், வடமொழிக்கல்லூரி, திருவையாறு,

வழி மொழிந்தோர்:—சோமசுந்தர தேசிகர் அவர்கள், வித்துவான், வடமொழிக்கல்லூரி, திருவையாறு.

இம் முடிபுகள் எட்டும் அவையோரால் ஒருங்கு ஒப்பப்பெற்றன.

ஆண்டுவிழாவில் இரண்டாவது முடிபு வழிமொழிந்தகாலை, திருவாளர் வன்னியரவர்கள் படித்த இரங்கற்பாக்கள்:—

அன்னைத் தமிழ்க்கல்வி யஃதேதகண் கண்ட அறமதற்குப்
பொன்னைக் கொடுக்கு மதுவேதான் பெற்ற பொருட்பயனும்
என்னைத் தவமு மினையா தளிக்குமிஃ தின்பமெனும்
நின்னைப் பொருவார் உளரோ சிதம்பர நேயத்தனே.

பாராய் இரங்காய் தமிழ்த்தொண் டெனவே பகரினும்பை
ஈரா யிரத்தொன்று மீபாத விந்த விருநிலத்தே
ஓரா யிரவிலக் கம்பொன் னளித்தரு ளூற்றவனே
சீரா யிரம்பெற்றும் நீசென்ற தென்னை சிதம்பரனே.

இம்முடிபுகள் நிகழ்ந்த பின்னர், ஆங்கிலம், தமிழ்மொழிகளில் வல்லுநராகிய திருவாளர் வே. முத்துசாமி ஐயரவர்கள் M. A., L. T., (பள்ளிக்கூடங்களின் உதவியாராய்ச்சியாளர், திருவாரூர்) **பொன்னியாற்றின் போற்றிச் சிலேடைப் பதிகம்** எனத் தாமியற்றியுள்ள அரிய நூலைப் படித்துப் பொருள் விரித்துரைத்தனர். அவைத்தலைவரவர்கள் அப்பாடல்களின் வளங்களைப் பாராட்டியதொடு திருவாளர் ஐயரவர்களைப் போன்று ஆங்கிலப் பயிற்சிமிக்கார் ஒவ்வொருவரும் தாய்மொழித் தொண்டியற்ற முன்வரல் வேண்டுமெனக் கூறியமர, அவையோர் மிக்க கையொலியால் தம்மகிழ்ச்சியினைக் காட்ட, காலைத்திருவிழா இனிது முற்றியது. அப்பதிகத்தினைக் கீழே சேர்த்துள்ளேம்.

உ

பொன்னியாற்றின் போற்றிச் சிலேடைப் பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

காவிரிக்கும் சிவபிரானுக்கும் சிலேடை.

மாவுற வாட்ட லானும் மதிதலைக் காட்ட லானும்
தேவுறு கொன்றை யானும் திளைக்கவின் பொன்ற லானும்
ஓவற ஒளிர்த லானும் ஒளிர்கங்கை மிளிர்த லானும்
தாவறு சிவனும் பொன்னித் தண்புனற் றகைமை போற்றி.

காவிரிக்கும் உமாதேவிக்கும் சிலேடை.

கிரிமிசைப் பிறப்பால் நாளுங் கிளர்தரு கயலங் கண்ணால்
தரைமிசை யுயிர்கள் தாங்கும் தண்ணிய நீர்மை தன்னால்
பரவுறப் பாங்கர்த் தெய்வப் பதியுற லால்மா தேவி
பொருவுசீர்ப் பொன்னி நன்னீர்ப் புண்ணியப் பொலிவு போற்றி.

கண்-இடம்; கண். பதி-ஊர்; தலைவன்.

காவிரிக்கும் திருமாலுக்கும் சிலேடை.

போற்றிமண் காத்தலானும் புரிவளை தாங்க லானும்
ஆற்றலா னடர்த்து மோதும் ஆழிசேர் கையி னானும்
ஏற்றநற் றிருவின்செல்வி யிலங்கிட லானும் என்றும்
சாற்றுமா லாங்கா வேரி சார்புனற் றூய்மை போற்றி.

சேர்கை-சேருதல்; சேருங்கை. ஆழி-கடல்; சக்கரம்.

காவிரிக்கும் இலக்குமிக்கும் சிலேடை.

மாட்சிசேர் செய்ய கஞ்ச மலர்மிசை வருத லான்நல்
ஆட்சிசேர் வரங்க ளாரவளித்தலாற் பொன்னிப் பேரால்
நீட்சிசேர் வாசமால்பொன் நிறத்தினாற் பூம டந்தைக்
காட்சிசேர் திருக்கா வேரிக் கடிபுனற் பெருமை போற்றி.

வாசம்-மணம்; வசித்தல். நிறம்-வர்ணம்; மார்பு.

காவிரிக்கும் பிரமனுக்கும் சிலேடை.

நான்முகம் பரவு மாற்றால் நலக்கமண் டலஞ்சேர் கையால்
கான்மல ருறலாற் றன்பாற் கலைமறை பயினு நாவால்
மான்மல ருந்தி நாளும் வயங்கலால் பிரம னாகும்
மான்மிய மிகுசீர்ப் பொன்னி வான்புனல் மாண்பு போற்றி.

கான் மலர், கால் மலர் என்றும்; நலக்க மண்டலம், நலக் கமண்ட லம் என்றும் பிரிக்க. உந்தி-செலுத்தி; நாபி.

காவிரிக்கும் கலைமகட்கும் சிலேடை.

வேதமார் முதல்வர் நாவில் விளக்கமுற் றிடலாற் றாவெண்
போதுமீ துறலாற் கைசேர் புத்தகம் பொலியுஞ் சீரால்
மேதகு கலைக ளாங்கண் மேவலால் நாம டந்தை
ஓதநே ரென்னும் பொன்னி ஒண்புனற் றண்மை போற்றி.

புத்தகம்-புதிய வீடுகள்; சுவடி. கலை-மான், நூற்கலை.

காவிரிக்கும் விநாயகருக்கும் சிலேடை.

மாமுக முடைமை யானும் மதகரி முழக்கத் தானும்
எழுமூறு துதிக்கை யானும் இடையூறு நீக்க லானும்
தேமிகு நால்வா யானும் தெங்குறு மகட்டி னனும்
சேமஜங் கரனும் பொன்னித் தெண்புனற் றேசு போற்றி.

மதகு அரி, மத கரி எனப்பிரிக்க. வாய்-வாய்க்கால் ; வாய்.

காவிரிக்கும் முருகக்கடவுளுக்கும் சிலேடை.

மூவிரு முகங்க ளார்ந்து முயங்கெழில் வள்ளி யோடு
மேவுகுஞ் சரமா துற்று மிளிர்கங்கை சார்ந்து நாளும்
மாவுல கசுர வெம்மை மாற்றியு மயில்மீ தேற்றும்
சேவலஞ் செல்வ னுங்கா விரிப்புனற் சிறப்புப் போற்றி.

குஞ்சரம், மாது எனவும் தேவகுஞ்சரி எனவும் கொள்க. உலக சுர வெம்மை எனவும், உலகு அசுர வெம்மை யெனவும் பிரிக்க. மயில், அயில் எனமுறையே கொள்க.

காவிரிக்கும் நால்வருக்கும் சிலேடை.

ஒத்துறு கையி னனும் உழவாரப் பணியி னனும்
சித்திரப் பரவை தோயுஞ் செம்மையி னனும் மேலாம்
பத்தியிற் பெருந்து றைசேர் பான்மையி னனும் சைவ
வித்தக நால்வ ராங்கா வேரிநீர் விழுப்பம் போற்றி.

நால்வர்க்கும் முறையே தாளம் கையுறல், உழவாரப் பணி, பரவையார் மணம், பெருந்துறை சேர்தல் எனும் இவை குறிக்கப் பெற்றுள. அ பணி அல்லது அப்பு அணி எனப் பிரிக்க. பக்தி-வரிசை ; பக்தி.

காவிரிக்கும் பொது அடியார்களுக்கும் சிலேடை.

வெள்ளிய தோற்றத் தானும் விளங்குகண் மணிக ளானும்
உள்ளியற் றூய்மை யானும் உரியசெந் தண்மை யானும்
தெள்ளிய நிறைவி னனும் சிவதல மருவ லானும்
ஒள்ளடி யாராம் பொன்னி உயர்புனல் போற்றி போற்றி.

கண் மணி-தேனும்; மணியும், கண்-இடமெனவுமாம். கண் மணி-உருத்திராக்கம்.

வே, முத்துசாமி ஐயர், எம். ஏ., எல். டி.,
திருவாரூர்.

இப்பால், பிற்பகல் $22\frac{1}{2}$ நாழிகை (3 மணிக்கு) மீண்டும் மாலை நிகழ்ச்சிகள் தொடங்கின. முதனுளினும் பலப்பலர் ஈண்டியிருந்தனர். இன்னிசைச் செல்வர் வன்னியரவர்களாலும், திருவையாற்று வடமொழிக்கல்லூரித் தமிழாசிரியர், திருவாளர் சந்தானம் ஐயங்காரவர்களாலும் கடவுள்வாழ்த்து தமிழ்த்தெய்வ வாழ்த்துக்கள் இனிது பாடப் பெற்றன.

விரிவுரைகள்.

பின், திருத்தவத்துறைப் (லால்குடி) பெருந்தகையாராகிய அ. **சரவண முதலியாரவர்கள், மெய்ப்பொருள்** என்னும் அரிய விரிவுரையை மேற்கொண்டு, திருக்குறள், தேவாரம் திருவாசகம் முதலிய உயர் நூல்களிலெல்லாம் தாம் எய்தியுள்ள நுண்மாண் பயிற்சியும், தம் முன்னைத்தவத்தா லெய்திய இன்னிசை யாற்றலும் கண்டு அவையோர் மகிழ, பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட இனிது எடுத்துரைத்தனர்.

அதன்பின், திருநாரையூர் **திருவாளர் முத்துக்குமரபிள்ளையவர்கள்** தமிழின் இனிமையில் தோய்ந்து கிடக்கும் தமது உள்ளத்தில் தமிழின் உண்மைப் பெருமையினை நினையுந்தோறும் எய்தும் மகிழ்ச்சி மெய்ப்பாடு செவ்விதிற் புலனாக, அவையோர் நிறைந்து ததும்பும் நகைச்சுவையினை இடைவிடாது எய்த, **தமிழ்** என்ற இனிய விரிவுரை பொன்று—இன்னிசைச் செய்யுட்கள் இடை இடை விரவ—நன்கு எடுத்துரைத்தார்கள்.

மூன்றுவதாக, செந்தமிழ்ப் புலமையும் தாய்மொழித் தொண்டும் முதிர்ந்து, செய்யுள் வரைதல், உரை நடை எழுதல், விரிவுரை யியற்றல் எனும் முத்துறையினும் உள்ள தம் அரிய ஆற்றலை இத்தமிழ் நாட்டிற்குப் பன்னெடுங்காலமாகப் பயனுறச் செய்துவரும் தமிழ்ப் புலவர் **திருவாளர். அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், சேக்கிழாரும் சிவஞான போதமும்** என்பது பொருளாகச் சிவஞானபோத நூற்பாக்களின் கருத்து நுணுக்கங்களெல்லாம் **உலகேலாம்** என்று தொடங்கும் திப்பியப் பாவினிடத்துக் காணலாகும் அருமைத்திறனை எடுத்துக்காட்டி அவையோர் மகிழ்ச்சி வெள்ளத்தாழச் செய்தனர். இம்மட்டில்

விரிவுரைகள் நிறைவேறினவாக, அவைத்தலைவரவர்கள் அவ்விரிவுரைகளின் அருமை பெருமைகளை ஏற்றவாறு பாராட்டியதொடு அவையோர் என்றும் மறவாது மகிழப் பலப்பல நுண்மாண் கருத்துக்களை அவ்வத்துறைகளில் எடுத்தியம்பி அவையோர்தம் நீண்ட மகிழ்ச்சி யார்ப்பினிடையே அமர்ந்தனர்.

இப்பால், சங்க அமைச்சர் முழுமுதற் கடவுளொடு இக்கார் காலத்து இவ்விருநாளினும் விழா இனிது நடைபெற அருள் கூர்ந்த மாமழைத் தெய்வத்தினைப் போற்றி; விழா விருநாளினும் பற்பல வெளியூர்களினின்றும் வந்து பலப்பல நலக்குறைவுகளை உற்றிருந்தும் மகிழ்வொடு அவையினைச் சிறப்பித்தருளிய புலவர்கள் செல்வர்கள் முதலியோர்களுக்கும், தங்கள் அருமைப் பொழுதுபோக்கினிடையே நெடுஞ் சேய்மையினின்று வந்து விரிவுரைகள் இயற்றியருளிய புலவர்கட்கும், இச்சங்கத்தின் எண்ணம் என்றும் அகலாத பேரருளினராம் அவைத்தலைவரவர்கட்கும், விழாநாட்களில் இசையுடன் பாடி மகிழ்வித்த இசைச் செல்வர்கட்கும், ஆண்டுவிழாவிற்கு அரும்பெருங் கொடைகளும் ஏனை உதவிகளும்புரிந்த அறச்செல்வர்கட்கும், ஆண்டுவிழாவிற்கு வேண்டும் அலுவல்களையெல்லாம் செய்த உண்மைத் தமிழன்பர்கட்கும், விழாக்காலத்தே வரவியலாமையின், அன்புகூர்ந்து திருமுகம் எழுதிவாழ்த்திய அன்பர்கட்கும், இன்னனைய பிறர்க்கும் சங்கத்தின் மனமார்ந்தவணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டனர்.

முடிவில், விரிவுரையாளர்கள் அவைத்தலைவரவர்கள் முதலியோருக்கு மாலைகள்சூட்டல், வந்திருந்தோர்க்கு அடகு முதலிய அளித்தல், கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து முதலிய வற்றால் விழா இனிது நிறைவேறியது.

அதுபோது, பண்டிதர் சிலர் அவைத்தலைவரவர்களுக்கு கூறிய

வாழ்த்துப்பாக்கள்.

அன்பெலாந் திரண்டோர் வடிவெடுத் தென்ன அவனியிற்
றோன்றியென் போல்வார்
துன்பெலாம் விலக்கிச் சுகமெலாம் புகுத்தும் சுகுணமார் பண்டித
மணிப்பேர்

மன்பெரும் புலவ! வாய்மையா லறிவாற் கதிர்பொரு மமலனு
நின்னை
நன்புலத் தோர்கள் நற்கதி ரேச நாமமிட் டழைப்பது நலமே. 1

துன்னுசெந் தமிழ்ப்பாற் கடலெனு நின்பாற் றோன்றிடு பிரசங்க
வமுதை
என்னுளம் போல ஏனையோ ருளமும் ஏற்புற வேணவா மிகலால்
மன்னுநன் மேனிக் குற்றிடு வருத்த மனக்கொளா தக்கிரா
சனத்து
முன்னுற வமர்ந்த வைசியர் குலமா முதல்வநீ வாழிநாள் பலவே!
2

தேனினிமை வாய்மொழியாம் செந்தமிழ்நற் சிரஞ்சீவித்
திறம்பெற் றோங்க
மேன்மைபெறு காவிரிநீர் வளஞ்சுரக்கும் விரிபுகழோர்க் கரந்தை
யூர்க்கண்
தான்பதினுன் காண்டுவளர் சங்கக்கூழ் தழையவரு முமாம
கேசன்
ஆன்றபுகழ் ஓங்கவருள் தமிழ்த்தாயி னடிமலர்க ளணிவாம்
யாமே. 3

எம். எஸ். சந்தானமையங்கார்,
தமிழ்ப்பண்டிதர், திருவையாறு.

எண்டிசை போற்று மெழின்மணி யென்னிரு கண்மணியே
வண்டிசை மாலை வசிய சிகாமணி வாண்மணியே
வெண்டிரு நீறணி யுஞ்சைவ வெண்மணி விண்மணியே
பண்டித மாமணி நற்கதி ரேசப் பருமணியே. 1.

விஞ்சைத் தனமணி நீயுந் தலைமையை மேவியதாற்
றஞ்சைக் கரந்தைத் தமிழகத் தென்றுந் தமிழ்ப்பயிர்க்கு
மஞ்சை நிகர்க்கவும் வான்பொரு ளீந்துநல் வாழ்வுதரும்
நஞ்சை யடக்கி யமரரைக் காத்திட்ட நம்பரமே. 2

மு. தண்டாயுதபாணிக்காடவராயர்,
தமிழ்க்கணக்காயர், விண்ணமங்கலம்.

விரிவுரையாளர்கட்குக் கூறிய சிறப்புச் செய்யுட்கள்.

நேரிசை வெண்பா.

தண்டமிழ்தேர் நற்கரந்தைச் சங்கவிழா வீட்டத்துப்
பண்டை புலவருளப் பாங்குநனி—விண்டமுதம்
நேர்மாரி பெய்துள் நிறைவித்த தொண்மதுரைக்
கார்மேகப் பேர்மேகம் காண்.

வாடாத பூங்கரந்தை வண்டமிழின் சங்கத்து
நாடாரு மேயக்க நாட்டினன்—பீடார்நம்
வள்ளுவர்சீர் சென்னை வருமணிநா வுக்கரசாம்
தெள்ளியவாக் காளன் தெரிந்து.

வே. முத்துசாமிஐயன், எம். ஏ., எல். டி.,

ஆண்டுவிழா நிகழ்ச்சி முற்றியது. நலம்.
இதழாசிரியர்.

உ

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி மறுப்பு.

இரண்டாண்டுகளுக்கு முன்னே சிறியேன் பதிப்பித்த கலிங்கத்துப் பரணியைப் பெரியார் அனைவரும் பாராட்டி, எனக்கு ஊக்கம் ஊட்டிவருகின்றனர். அத்தகைய பதிப்பை ஆராய்ந்து திருத்தம் பல கண்டதாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிச் சபைத்தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள் 'செந்தமிழ்' உ௩-ஆம் தொகுதியின் ௩., ௫-ஆம் பகுதிகளில் 'கலிங்கத்துப் பரணியாராய்ச்சி' என்னும் பெயர்கொண்டதொரு விரிவான கட்டுரையெழுதி வெளியிட்டனர். அவர் அதனை யெழுதத் தொடங்கியபொழுது, 'கற்பாலுமிழ்ந்த மணியுங் கழுவாது விட்டால்-நற்பாலழியும்' என்பது வழக்காறன்றோ' என வினவியிருத்தலால், நூலாராய்ச்சியில்

தாமேவல்லுநர் எனத்தம்மை மதித்திருத்தல் வெளியாகின்றது. அறிஞர்கள் ஆய்ந்து துணிவார்களாக.

அவ்வாராய்ச்சி வெளிவந்தவுடனே 'கலிங்கத்துப் பரணி யாராய்ச்சியைப்பற்றிய சில குறிப்புக்கள்' என்ற பெயரிட்டுச் சுருக்கமானதொரு மறுப்பெழுதிச் 'செந்தமி'ழுக்கனுப்பினேன். அது, அப்பத்திரிகையின் உரு-ஆம் தொகுதி எ-ஆம் பகுதியில் வெளிவந்தது. அதனைக் கண்டவுடனே ஆராய்ச்சியாளருக்கு மிக்க சினமெழுந்தது. அச்சினம் 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சிச் சங்கோத்தரம்' என்ற பெயருடன் வெளிப்பட்டுச் செந்தமிழ் ௩௪ தொகுதி கூ-ஆம் பகுதியின் கக-பக்கங்களை நிரப்புகின்றது.

அச்சங்கோத்தரத்தின் தொடக்கத்தில், ஆராய்ச்சியாளர் தாங்காட்டிய திருத்தங்களிற் பலவற்றையும் நான் அங்கீகரித்து விட்டதாகக்கூறி மகிழ்கிறார். அவரங்ஙனம் மகிழக்காரணமில்லை யென்பது, நான் எழுதிய குறிப்புக்களை உற்றுநோக்குவார்க்கு இனிது விளங்கும். பிறழ்ச்சிகளிற் சிலவற்றை யெடுத்துக்காட்டு தலே அமையுமென்றுநினைத்து நான் முதலிற் சுருக்கமாக வெழுதினேன். அஃதவர்க் குடம்பாடாகாமையால், இப்பொழுது அதனினுஞ்சிறிதுவிரிவும், வெளிப்படையுமானதொரு மறுப்பு எழுத வேண்டியதாயிற்று. இம்முறையிலே, முதலில் அவரதாராய்ச்சியி லுள்ள (முன்பு காட்டியவையல்லாத) மற்றுஞ் சில பிழைகளை யெடுத்துக்காட்டிப் பின்னர்ச் சங்கோத்தரத்திற்குச் செல்வேன்.

1. ஆராய்ச்சியாளர், தாழிசைகளின் முன்பின் தொடர்ச்சிகளையும் சொல்லாற்றலையும் நோக்காது உரைசெய்கின்றார். அஃதெங்ஙனமெனில், அவரது ஆராய்ச்சி யெண் (14)ல் 'சேனையின் செலவு' என்றெடுத்துகொண்டு, 'எழுதூளியடங்க நடந்து' என்னும் 349-ஆம் தாழிசையின்கண் உள்ள 'அதுமீள **வேழும் போழுது'** என்னும் பாடத்தைநீக்கி அது மீள **விழும்போழுது** என்பதைக்கொண்டு, 'அது' என்னுஞ் சொல்லுக்குச் சூரியன் எனப்பொருள் செய்திருக்கின்றார். அப்பொருள் அவரை நேரல்லாத வழியில் நெடுந்தூரமிழுத்துச் சென்று அல்லற்படுத்தி

விட்டது. தாழிசைகளின் முன்பின்தொடர்ச்சி நோக்குவோர்க்கு 'அது' என்பது அடங்கின அத்தூளி எனத் தூளியையே சுட்டி நின்றதென்பது தெற்றென விளங்கும். அங்ஙனம் விளங்கவே. அத்தாழிசைக்குப் பொருள்—"எழுந்ததூளி யடங்கினவுடனே நடந்தும், சூரிய சந்திராதிகளின் உதயத்தாலே செல்லுந்திசையைத் தெரிந்துகொண்டும், அத்தூளி மீள எழும்பொழுது ஏகலொழிந்து இளைப்பாறியும் இவ்விதமாகக் கடல்போன்ற படையெப்பொழுதுந் தவிராது வழிக்கொள்ள" எனக் கூறவேண்டும் என்பதும் புலனும். இப்பொருளே பொருத்தமுடைய தென்பதனை ஆன்றோரறிவர். இத்தாழிசையின்பொருள் வெளிப்படையென்று நினைத்துக் கலிங்கத்துப்பரணி யரும்பொருள் விளக்கத்தில் யான் ஒன்று மெழுதாது விட்டேனாயினும், பின்னர் அச்சிட்ட கலிங்கத்துப்பரணிச் சுருக்கத்தின் குறிப்புரையிலேயே 'அது—அத்தூளி' என (மாணவர்க்காக)க் குறிப்பிட்டிருக்கின்றேன். அதுவும் அவர் கண்ணுக்குப் புலப்படவில்லைப்போலும். இனி, ஆராய்ச்சியாளர்கொண்ட பொருளிலுள்ள குற்றங்களையுஞ் சிறிது காட்டுகின்றேன்:—'அது' என்பது சூரியனைச் சுட்டினால், 'மீள' என்னுஞ்சொல் பயனற்றதாகும்; ஆகவே, 'அது விழும் பொழுது ஏகலொழிந்து' எனலே அமையும். அன்றி, 'மீள' என்னுஞ் சொல்லையும் வைத்துக்கொண்டு அவர் காட்டியபடி (பக். கஅ௩) 'உதயத்தே செல்லற்குரிய திசையைக்கண்டு நடந்த சேனை, மீளப்பொழுது சாயுங்கால் ஏகுதல் ஒழிந்து' எனப்பொருள் பண்ணினும், அதனாற் கொள்ளக்கிடப்பது—சூரியோதய முதல் அத்தமனம்வரையில், சேனை ஓய்வின்றி வழிநடந்தது என்பதாம். இஃதியலாதகாரியம். ஆராய்ச்சியாளர் அவ்வளவிலமையாது, இத்தாழிசையிலே பின்னும் ஒரு தவறு கண்டுபிடித்ததாக எண்ணி எப்பொழுதும் என்பதை 'எற்பொழுதும்' எனத்திருத்தி, 'காலையில் நடந்தும், மாலையிற் போக்கொழிந்து சிறிதிளைப்பாறியும், பின் இரவினும் விடாது புறப்பட்டும்—இவ்வாறு சேனையின் பகைமேற்செலவு இடையறாதுவிரைந்து நடைபெற்றது—என்ற சிறப்புடைப் பொருள் இப்பாடத்தாற் பெறப்படுதல் காணலாம்.' என்றெழுதிச் செல்லுகின்றார். அவர் கூற்

றின்படி 'இரவினும் விடாது புறப்பட்டசேனை, மீண்டும் போக்கொழிந்த காலம் குறிப்பிடப்படவில்லை. அதனால், பகல் முழுதும் ஓய்வின்றி நடந்தபடை (மாலையிற் சிறிதுபொழுது தவிர) இரவினும் ஓய்வின்றி நடந்ததென்று கொள்ளவேண்டிவருகிறது. இஃதடுக்குமாவென்பதனை அவர் ஓர்ந்திலர்போலும்.

2. ஆராய்ச்சியெண் (27ல் I)–இதில் ஆராய்ச்சியாளர், 'நிணத்துகில் என்ற வழக்கை (மற்றவரறியாரென நினைத்து) 473, 496 முதலிய தாழிசைகளிற் காண்க' என்று கூறியிருக்கிறார். அவ்விரண்டு தாழிசைகளிலும் 'நிணத்துகில்' என்ற வழக்கில்லை யென்பதனையும், அவ்வழக்கும் நிணத்தைப்பற்றிய பிறவழக்குகளும் இன்னின்ன தாழிசைகளிலே வந்திருக்கின்றன வென்பதனையும் என்பதிப்பிலே நான்காட்டிய 'அரும்பத முதலியவற்றின் அகராதி'யிலிருந்து முதலில் அவர் தெரிந்துகொண்டு, பின்னர் 92-ம் தாழிசையின் பின்னடிக்குப் பொருள்கூறி முடிபு காட்டுவாராக.

3. ஆராய்ச்சி யெண் (27)-இதன் இரண்டாம் பிரிவிலே 'புட்பகம் என்பது ஆபரணமன்று; சளுக்கியர் போன்றவரிடமிருந்து பெற்ற உயர்ந்தகளிறுகளாம். புட்கப்பிடியும் என்பது சாஸனவழக்கு' என்கிறார் ஆராய்ச்சியாளர். அங்ஙனமாயின், அவர் 'ஈண்டுக்காட்டிய சளுக்கியர் யார்? அச் சளுக்கியரிடமிருந்து விசயதரன் களிறுகள் பெற்றது எப்பொழுது; எதற்காக? விசயதரனே சளுக்கியனல்லனோ? 'இவை புட்பகம்' என்று விசயதரனுக்குக்காட்டினர் 316—319 ஆகிய நான்கு தாழிசைகளிலுங்கண்ட அரசரில் ஒருவரல்லரோ? என்பனபோன்ற பலவற்றையுஞ் சிந்திக்கவேண்டும். அன்றியும், அவர் 'புட்பகப்பிடியும் என்பது சாஸன வழக்கு' என்றமாத்திரத்திலே புட்பகம் என்பதற்குக் களிறு என்னும் பொருள் நிலைபெறுமாவென்பதனையும் சிந்திக்கவேண்டும். அவர் காட்டிய சாஸனவழக்கு, வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் வந்திருக்கின்றது. அவ்வழக்கு அதனுடனில்லாது 'புட்பகப்பிடியும் பொருகளிற் றீட்டமும்' எனத்தொடர்ந்து செல்லுகின்றது. இவ்வடியிலுள்ள 'புட்பகம்'

என்பதற்குக் 'களிறு' எனப் பொருள்கொண்ட அவர், 'பொரு களிற்றிட்டம்' என்பதற்கு என்ன பொருள் கூறுவாரோ தெரிய வில்லை! ஆகவே, இவ்வடிமுழுதும் உற்றுநோக்கிப் பொருள் கூறித் தங்கொள்கையை நிலைநிறுத்துவாராக.

4. மேலே காட்டியபடி முன்பின் தொடர்பு நோக்காது பொருள் கூறுவதிலும், பிறரைக்குற்றங்கூறுவதிலும் ஆராய்ச்சி யாளர் திறமைவாய்ந்தவர் என்பதற்கு இன்னம் ஒன்றுமட்டுங் காட்டிவிட்டு, அப்பால் அவரது சங்கோத்தரத்திற்குச் செல் வேன்: ஆராய்ச்சியெண் (28) இதன்கண் ஆராய்ச்சியாளர் கூறு வது,-கடைதிறப்பில் இடைச்செருகலாயிருக்கலாமென்று நான் கருதிய 13 தாழிசைகளிலே பெரும்பாலன சயங்கொண்டார் பாட்டென்று கொள்ளவேண்டுமென்பது. ஆனல், அவர் அப் பெரும்பாலன இன்னின்னவென்று சுட்டிக்காட்டவில்லை. அப் பதின்மூன்றில் 4, 5-ஆம் தாழிசைகளிரண்டுங் இரணிபவதைப் பரணிப்புாட்டுக்களென்பது இப்பொழுது எனக்குத் தெரிந் திருக்கின்றது; மற்றவற்றையும் ஆராய்ந்து வருகிறேன். அவை யாவும் இனி என் இரண்டாம் பதிப்பிற் காட்டப்பெறும்.

ஆராய்ச்சியாளர் தமது ஆராய்ச்சியின் முடிவுரையிலே (பக்-ககூஉ) 'இவ்வாராய்ச்சியுட் கண்டவிஷயங்கள் இனிவரும் பரணிப் பதிப்புக்கு ஏற்றபெற்றி **உதவக்கூடியனவாயின்** அதுவே எனது இச் சிறுமுயற்சிக்குப் பெரியபிரதிப்பயனாகும்' என்றுகூறி முடித்திருக்கிறார். தொடங்கும்பொழுது 'கற்பாலு மிழ்ந்த மணியுங்கழுவாது விட்டால்' என்று கம்பீரமாகத் தொட ங்கிய அவர், முடிக்கும்பொழுது 'உதவக்கூடியனவாயின்' என்ற தனல், தமதாராய்ச்சியில் தமக்கே ஐயமுண்டாயிற்றென்பது பெறப்படுகின்றது. அவரங்ஙனம் ஐயுற்றதற்குக் காரணமும் 'செந்தமிழ்' அபிமானிகளுக்குத்தெரியும். ஏனையோரறியும் பொருட்டு அக்காரணத்தை மீண்டுக்காட்டுகின்றேன். ஆராய்ச் சியாளர் இதற்கு முன்னும் ஒருமுறை தாழிசைமணிகளைக் கழு வப்புகுந்து, அவற்றிற்கு மாசூட்டிப் பாதியில் நிறுத்திவிட்டார். (செந்தமிழ்—எ, அ—ஆம் தொகுதிகள் பார்க்க.) ஆண்டும் அவ

ரிட்டபெயர் 'கலிங்கத்துப்பரணியாராய்ச்சி' என்பதே. பின்னர், அஃதவர்க்கே உதவாமற் போயிற்றென்பது, அவரெழுதிய இரண்டாவதாராய்ச்சியினல் இனிதுவிளங்குகின்றது. அவ்வாறே, இனி இவ்விரண்டாவதாராய்ச்சியும் உதவாமற் போகும் என்பதேயாம். அத்தகைய ஆராய்ச்சி, இனி, யார்க்குத்தான் உதவக்கூடும்!

5. இனி அவரது சங்கோத்தரத்தை யெடுத்துக்கொள்ளின், அதிற் பாதிக்குமேலாக (8½ பக்கம்) 'கடைதிறப்பின் பொருள்' என்பதனுலே நிரம்பியிருக்கின்றது. ஆண்டு அப்பொருளைத் தெளிவுபடுத்தி முடித்துக் காட்டிவிட்டதாகவே அவர் கருதுகின்றூர். அதற்கேற்பச் சிலப்பதிகார முதலியவற்றிலிருந்து மேற்கோள்களுங் காட்டியிருக்கின்றூர். அம் மேற்கோள்களும், அவர் கண்டபொருளும் இவ்விடத்திற்கு ஒவ்வுமாவென்பது ஆன்றோர் ஆராயத்தக்கது. இல்லாததொன்றை ஏறிட்டுக்கொண்டு, அதற்கு மேற்கோள் பல காட்டுவதிற் பயன்யாது? கலிங்கத்துப்பரணியின் கடவுள்வாழ்த்து முதல் முடிவுவரை ஒரேதொடர் என்பதற்கு, நான் எழுதிய அரும்பொருள் விளக்கத்தில் ஆங்காங்கே முடிபும், குறிப்பும் காட்டி விளக்கியிருக்கின்றேன். அவற்றையேனும் அவர் பொறுமையோடு உற்று நோக்கினல், கடைதிறப்புக்குத் தாங்கொண்டபொருள்பொருத்தமற்றதென்பது புலப்படும்.

6. சங்கோத்தரத்திலே அவர் இரண்டாவதாகக் கூறியிருப்பது 'பேய்விழிப்பின் உவமை' என்பதாம். இவ்விடத்தில் அவர் தவறினதுபோல வேறுயாருந்தவறூர். அவர், 125-ஆம் தாழிசையில் 'குன்றுதோன்றுவ' என்று தாம் காட்டிய பாடத்தை ஏட்டிலில்லாததென்று நான் என் குறிப்பிற் காட்டியதாக எண்ணிக்கொண்டு, மிகவும் வருந்தி என்னென்னவோ கூறி, ஒன்றரைப் பக்கங்களை அநியாயமாகக் கெடுத்துவிட்டார். (பக் ௩௪௪, ௩௫0) ஆனல், அவர் எண்ணியபடி நான் என் குறிப்பிற் காட்டவில்லை யென்பதும், 'புகுகுன்றி தோன்றுவ' என்னும் பாடத்தையே ஏட்டிலில்லாதது என்று காட்டியிருக்கிறேன்

என்பதும்—உ௪அ-ஆம் பக்கம்—பார்ப்பவரனைவருக்கும் புலனும். அவற்றை இனியேனும் அவர் நன்குபார்த்துத் தெளிவாராக. மேலும், நெடும்பனங்காடு பேய்த்தோற்றத்திற்கு உவமையாவ தன்றித் தனிப்பனையும், வற்றியுலர்ந்த கள்ளியும் உவமையாகா தென்பதும், சயங்கொண்டார் பேயைக்குன்றோடுவமித்தது எனக்குத் தெரியாதென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபென்பது ௩௫௨, ௩௫௩-ஆம் பக்கங்களால் வெளியாகின்றது. பேய் பசித்து நின்ற நிலையிலே தனிப்பனையை உவமையாக்கி 215-ஆம் தாழிசையிலும், அது கூழுண்டு பருத்து நின்ற நிலையிலே குன்றையுவமையாக்கி 572-ஆம் தாழிசையிலும் சயங்கொண் டார் அழகுறக் கூறியிருத்தலையும், இரணியவதைப்பரணி 68-ஆம் தாழிசையிலே பேய்க்குக்கள்ளி உவமையாயிருத்தலையும் நோக்கின், அவரது துணிபு துணிபடும்.

7. மேற்காட்டியவாறே, ஆராய்ச்சியாளரது சங்கோத்தர முழுதும் வீண் சங்கோத்தரமா யமைந்து கிடத்தலின், அவ்வள வையும் எடுத்து விவரித்துக்காட்டுதல் படிப்பவர்க்குச் சலிப்புண் டாக்கும் என்று கருதி இவ்வளவோடு நிறுத்துகின்றேன். இனி, ஆராய்ச்சியாளர் இத்தகைய (கட்டின வீட்டுக்குப் பணிக்குச் சொல்லுவது போன்ற) வீண்காரியங்களிலே தலையிட்டுத் தமது காலத்தையும், செந்தமிழ்ப் பத்திரிகையின் அருமையான பக்கங் களையும், அவற்றைப் படிப்பவர்களின் நேரங்களையும் வீணுக்கா மல், கலிங்கத்துப்பரணிபோன்ற அல்லது அதனினுஞ் சிறந்த நூல்களையெடுத்துப் பலபிரதிகளை வைத்தொப்புநோக்கித் தமது ஆராய்ச்சிவன்மையைக் காட்டிப் பதிப்பித்துத் தமிழுலகுக்கு நன்மைபுரிவாராக.

அ. கோபாலையன்.

உ

சீத்தலைச் சாத்தனர்.

(ஊரும், மரபும்.)

மதுரைக் கூலவாணிகன் சாத்தனுரெனப் பெயர் கேட்ட அளவிலேயே இவரது ஊரும், மரபும் இன்னவெனத் தெரியவரும். எனினும், இவைபற்றிய பிறவுரைகளுமுண்மையால் அவற்றையும் இங்குக்கூறி யுண்மைகாண எழுந்ததிவ்வுரை.

இவரதூர் மதுரையேயாகவும், நற்றிணையுரையாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் வேறு எனக்கொண்டனர்: அது முன் இதழிற் காட்டப்பட்டது. சாத்தனர் தமது சொந்த ஊராகிய சீத்தலையினின்றும்நீங்கி, வாணிகஞ்செய்து பொருளீட்டற்பொருட்டு மதுரைசேர்ந்து அங்கு வாழ்ந்துவந்தனரெனவும் அவர் துணிகின்றனர்.

அவர் அங்ஙனம்துணிதற்கு மதுரைச் சீத்தலைச் சாத்தனர் என்றபெயரே பக்கமும், மதுரை யீழத்துப் பூதன்றேவனர் (நற், குறு, அகம்) மதுரைக் கடையத்தார்மகன் வெண்ணகன் (குறுந்) என்றபெயர்கள் சபக்கமும் ஆயினபோலும்.

முன்னையோர்கண்ட உரையனைத்தும் மெய் யென்பதற்கில்லை; ஒருகால் அவர்களே தவறியும் கூறியிருக்கலாம். இவ்வுண்மைத்தன்மையைப் 'பொய்யாமொழி'யொன்றும் வலியுத்தும். அத்தவற்றினல் அவரதுகடலன்ன கல்வியறிவிற்கு ஓரிழுக்கும் இல்லை. பெரியார்கூறிய பொருள்களை ஆய்ந்து தாம் அவற்றில் குறையெனக்கண்டவற்றை வெளியிட்டவர் அப்பெரியாரையிகழ்ந்தவருமாகார். ஆரியம், அங்கிலம் முதலிய பிறமொழியாளரும் இதுபோன்ற ஆராய்ச்சியிற்கண்டவற்றை நடுநிலைமையோடு வெளியிட்டுக் காண்கின்றனர். அவ்வாறே நமது பின்னை ஐயரவர்கள் நாடியறிந்துகூறியவை யுண்மையாயிருந்து, முன்னையோர்கூறியவை தவறுயிருக்கினும்இருக்கலாமேயென்று மீட்டும்

இதுபற்றி நன்கு உசாவியறியத் தலைப்பட்டதில், அதனுனும் முன்னையார்கூற்றே உண்மையெனத் தெரிகிறதேயன்றிப் பின்னை யார்கூற்று உண்மையெனத் தெரியவில்லை.

சீத்தலைக்கு ஊர் என்று பொருள்கண்டு அது திரிச்சிராப் பள்ளியைச்சார்ந்த பெருமளூர்த்தாலூகாவிலுள்ளது என்றும் ஐயரவர்கள் கூறியது முந்திய இதழிலும்கண்டது. இங்குக்கூறும் பெருமளூர் என்பது இப்போது பெரம்பலூர் என வழங்கப்படுவ தேயாகும். இப்பெரம்பலூர் வட்டம் (தாலூகா) ஊர்களில் ஐய ரவர்கள் கூறுமாறு ஓர் ஊரேயில்லை யெனல் தெரிகின்றது.

இதுபற்றி, அப்பெரம்பலூர் வட்டம் பாதைமுதலியவற் றின் மேற்பார்க்கும் பணியிலிருப்போர் (லோகல்பண்டு ஓவர் சியர்) ஆகிய திருவாளர் நாராயணசாமிப் பிள்ளை யவர்களை யுசாவியதில் பின்வருவது தெரியலாயிற்று ; அது :—

'பெரம்பலூரிலிருந்து அரியலூர்போகும்பாதையில் கூ-வது கல்லில் பேரளியென்றோர் ஊர் இருக்கிறது ; இதற்குஅருகில் சித்தளிஎன்று வழங்கும் ஓரூர்இருக்கிறது ; இதுதவிரச் சீத்தலை யென்றாவது அதுபோன்று வழங்குவதாவது (சித்தலை, செய்த் தலை, சிர்த்தலை, சேய்த்தலை) எந்தஊரும் இந்த வட்டத்திலேயே (தாலூகா) கிடையாது' என்பதாம்.

சீத்தலை யென்பதே நாளாவட்டத்தில் **சித்தலை** யென்றும், பின் அதுவே யிப்பொழுது வழங்கும் வண்ணம் **சித்தளி** யென் றும் மருவியிருக்கவேண்டும் என்று கருதியதனுற் போலும் பின்னை ஐயரவர்கள் சீத்தலை யென்பது இதுவெனத் துணியலாயி னர்.

பேரளி யென்னும் ஓரூர் அருகிலிருப்பதை யுணரின் சித் தளியென்பது சிற்றளி யென்பதன் மரூஉவே யெனத் தெளியப் படுமாகலின், அவ்வாறு துணிய இடந்தராது.

இவ்வாறுணராமைபற்றியேதான் பின்னை ஐயரவர்கள் அங்ஙனம் மயங்கத்துணிந்தனர். இல்லாத ஒன்றனை யுள்ளதாக மயங்கி முன்னையோர் கருத்தையும்முரணி, ஆராய்ச்சியாளர் நன்கு ஆராயாமற் கூறுவதாற் கல்வியுலகிற்குத் தீமையே விளைத்தவராகின்றனர்.

இனி, இவரது மரபைப் பற்றிக் கூறுமுன், நந்தம் **செந்தமிழ்க்குரிசில்** ஒருவர், ஒருபுலவரது வரலாற்றில்—செந்தண்மையந்தணர் ; கவியரசர் ; புகழ்ப்பொருள் வணிகர் ; விருந்தோம்பிய வேளாளர்' எனக் கூறியிருப்பது * நினைவுக்குவந்து அவ்வுரையைப் பொன்னேபோற் போற்றிக் கூறி மேற்செல்வதே மேலெனத்தோன்றினும், இப்புலவரது பெயர் அவ்வாறு கூறற்கிடங்கொடுத்திலது. ஆதலின் இதுபற்றிய பிறவுரைகளும் தேரவேண்டியிருக்கின்றன.

தொல்காப்பியம், மரபியலில் "ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும், யாருஞ்சார்த்தி யவையவை பெறுமே" என்னுஞ்சூத்திரவுரையில் '**மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**' என்னும் புலவர் வணிகரெனக் கூறப் பெற்றுளார். அது போலச் சாத்தனாரை யின்ன மரபினரெனத் தெரித்துக் கூறிய பழையவுரை யொன்றுங் காணேம். ஆதலால், சாத்தனாருக்கும் **கூலவாணிகன்** என்னும் அடை, பிறப்புந் தொழிலும் பற்றியதோ? என்பது தெரியவேண்டும்.

வாணிகர், அக்காலத்து, இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததுதான் தெரிகிறது. கூலவாணிகர், அறுவைவாணிகர், பிட்டுவாணிகர் அப்பவாணிகர் † போன்றனவெல்லாந் தொழில்பற்றிவந்த பெயர்களே. வாணிகராகப்பிறந்து இத்தொழில்புரிவோராயினும், பிறர் இத்தொழில் புரிவோராயினும், அவரெல்லாம் இங்ஙனம் அழைத்தற்குரியோர்

---

* **நக்கீரர்** வரலாறு. † இவர்களை முறையே காழியர் எனவும், கூவியர் எனவுங் கூறுவர்.

களே. ஆதலால் சாத்தனருக்குக் கூலவாணிகன் என்னும் அடை தொழில் மட்டும் பற்றிவந்ததே யெனக் கொள்ளலாம்.

இதற்கு, மரபியல் அ0-ஆம் சூத்திரத்தில், 'வாணிக வாழ்க்கை வேளாண்மாந்தர்க்குச் சிறுவரவிற்று' எனக்கூறியிருக்கும் உரையும், உலகில் இன்றளவும் வாணிகரல்லாத பிறசாதி யாரும் வாணிகம் புரிந்துய்ந்து வருதலும் துணையாகக் கூடும்.

இவ்வாறு கூறுவதினும், மரபுபற்றி வாணிகன் சாத்தனு ரெனவும், இன்னவாணிகம் புரிந்து வந்தனரெனத் தொழில் பற்றிக் கூலவாணிகன் எனவும் அழைக்கப் பட்டனரென் பதும், அதனல் கூலவாணிகன் என்னும்அடை சாத்தனருக்குப் பிறப்புந் தொழிலும் பற்றி வந்த தென்பதுமே பொருத்தமாகத்தோன்றுகின்றன.

இதற்கு, அறுவைவாணிகன் இளவேட்டனர் வாணிகராகும் போது, கூலவாணிகன் சாத்தனர் வாணிகராதற்குத் தட்டில்லை யென்று கூறுவதும், அகத்திலும், புறத்திலும் இவர் வாணிகரே யென ரா. இராகவையங்காரவர்களும் மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாத ஐயரவர்களும் முறையே குறித்திருப்பதைக் காட்டுவதும் துணையாகும்.

அல்லாமல், செட்டிமகளாகிய மணிமேகலையின் கதையை யமைத்துக் காப்பியம் செய்தமையானும், அதனுள், சில வணிகமாந்தர், வணிகமகளிர்களின் துணைக்கதை கூறும் முகத்தான் வணிகராது மேம்பாடுகூறலானும், 'சந்நியாசிக்கும் சாதிய பிமானம் போகாது' என்னும் பழமொழிப்படி இவர் வணிக மரபினரேயெனக் கூறின் அது மென்மைக்கூற்று வொழியு மென்க.

இனிச் சாத்தனர் வாணிகஞ்செய்த பொருளாகிய கூலம் என்பது இதுவென்பதை மரபியலில் "மெய்தெரி வகையின் எண்வகை யுணவின், செய்தியும் வரையார் அப்பா லான" என்னுஞ் சூத்திரவுரையில், உணவுப்பண்டம் என்பதற்கு 'கூலம்' என்றும், அவை 'பயறு, உழுந்து, கடுகு, கடலை, எள், கொள், அவரை, துவரை, என்பன' என்றும் கூறப்பட்டிருத்தலாலறிக.

இக் கூலமென்னுஞ்சொல், சிலப்பதிகாரத்தில் பலவிடங்களிலும் வருகிறது. அடியார்க்குநல்லார் இச்சொல்லுக்கு ஓரிடத்தில் (இந்திரவிழவூரெடுத்த காதை ௨௨-௨௬) 'எண்வகைக் கூலங்களாவன—"நெல்லுப்புல்லு வரகு தினை சாமை, யிறுங்கு தோரையொடு கழைவிளை நெல்லே" என்பவை' என்று கூறுவர்.

மற்றோரிடத்தில் (ஊர்காண்காதை ௨௧௦-௨௧௧) 'கூலம் ஈரெண்வகைத்து : என்னை ? நெல்லுப்புல்லு வரகு......இராகியெண் கூலம்' எனவும் "எள்ளுக்கொள்ளுப் பயறுழுந் தவரை, கடலை துவரை மொச்சையென்றுங், குடனிவை முதிரைக் கூலத் துணவே எனவுஞ் சொன்னாராகலின்" என்றும் கூறுகிறார்.

இவையிரண்டும் தம்கூற்றாகக்கூறிப் பிறர்கூற்றாக "பதினெண்கூலமும் உழவர்க்கு மிகுக" என்று கூத்தநூலாசிரியர் பதினெண்வகைத்தெனக் கூறுவரெனவும், அன்றிக் கூலம் பலவகைத்து என்பாருமுளரெனவுங் கூறுகின்றனர்.

சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் 'கூலம்-கருஞ்சரக்கு' என்றும் 'கூலவீதி—அங்காடி' எனவும் கூறுகிறார்.

இவற்றால் கூலமென்பதற்குப் பலவுரைகளுண்மை பெற்றாம். ஆயினும் 'கூலவாணிகன் சாத்தனார்—தானிய வியாபாரி' என்று ரா. இராகவையங்கார் அவர்கள் கூறுகின்றனர்.

இவற்றால், சீத்தலைச் சாத்தனாரது ஊர், மதுரை யென்பதும், அவரது மரபு வாணிகமரபு என்பதும் பெற்றாம்.

பண்டிதர் அ. கந்தசாமிப்பிள்ளை.

உ

ஒலோக மா தேவீச்வர சாசனம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள் ளெல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசு
கொள்

ஸ்ரீ கோ விராஜகேஸரி வர்ம்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது இராஜேந்திர சிங்கவளநாட்டுப் பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாற்று இனிதிருந்தருளின திருபுவன சண்டேச்வரத் தேவகன்மிகளோம் விற்றுக் குடுத்த நிலவிலையாவணம் ஸ்ரீ ராஜராஜதேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியாரான ஒலோகமஹாதேவியார் திருவையாற்றி லெடுப்பித்தருளின ஒலோகமஹாதேவீச்வரத்து மஹாதேவர் கன்மிகளுக்கு விற்றுக்குடுத்த நிலமாவது; திருவையாறுடையார் ஸ்ரீ கோயிலிற் பெரிய புறத்திருச்சுற்றாலையில் வடகிழ் மூலையில் நின்றும் செவ்வேய் வடக்குநோக்கி நாற்கோல் திருவிழா வீதிவிட்டு நாட்டின புள்ளடிக்கல்லினின்றுந் தென்னெல்லை மேற்குநோக்கி முப்பத்தெண்கோலாசறுதியிற் திருவையாறுடையார் பெரியபுறத்திருச்சுற்றாலையின் வடமேன் மூலையினின்றும் செவ்வே வடக்குநோக்கி இரண்டே யரைக்காற்கோல் திருவிழா வீதி விட்டு நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்று மேலெல்லை செவ்வே வடக்கு நோக்கி பதின்மூன்றே காற்கோல்

சென்ற இடத்து நாட்டின புள்ளடிக் கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வேய் மேற்குநோக்கி பதினொரு கோல்சென்று திருவை பாறுடையார் திருவிழாப்புறநிலத்திற் கிழை வரம்பில் நாட்டின புள்ளடிக் கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வேய் வடக்கு........... ....லை கிழக்கு நோக்கிச் செவ்வே ஐம்பத்தொன்பதின் கோ லாசறுதியில் நாட்டின புள்ளடிக் கல்லேயுற்று இதனின்றும் செவ்வேய் வடக்குநோக்கி நாற்கோலாசறுதியினட்டின புள்ளடிக் கல்லேயுற்று இதனின்றும் செவ்வேய் கிழக்குநோக்கி எழுபதின் கோல் சென்று நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வேய் தெற்குநோக்கி நாற்கோலாசறுதியில் நாட்டின...... சென்று நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றுஞ் செவ் வேய் வடக்குநோக்கி இருபதின்கோல் சென்று நாட்டின புள் ளடிக்கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வேய் கிழக்குநோக்கி முப் பத்தறுகோல் சென்று, வடகிழ்மூலை யாசறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றுங் கிழெல்லை செவ்வேய்தெற்கு நோக்கி இருபத்தெண்கோலாசறுதியில் நாட்டின புள்ளடிக் கல்லேயுற்று............செவ்வே தெற்கு நோக்கி இருபத்தெண் கோலாசறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றும் செவ்வேய் மேற்குநோக்கி ஐம்பத்து நாற்கோலாசறுதியில் நாட் டின புள்ளடிக் புல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வேய் தெற்கு நோக்கிப் பதினாற்கோ லாசறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லே யுற்று இதனின்றும் செவ்வே மேற்குநோக்கி எழுபதின் கோலா சறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வே தெற்குநோக்கி இருபத்தெண்கோ லாசறுதியில் நாட் டின புள்ளடிக்கல்லேயுற்று இதனின்றுஞ் செவ்வே மேற்கு நோக்கிப் பதினறுகோ லாசறுதியில் நாட்டின புள்ளடிக் கல்லே யுற்று இதனின்றுஞ் செவ்வேய் தெற்குநோக்கி பதினெங்கோல் சென்று திருவையாறுடையார் பெரிய புறத்திருச்சுற்றுலையில் வடகிழ் மூலையில் நின்றும் வடக்கு நோக்கி திருவிழாவீதியாக நாற்கோ லாசறுதியில் நாட்டின கல்லேயுற்று இவ்விசைத்த பெருநான் கொல்லையிலும் அகப்பட்ட நிலம் மூன்றேமாகாணி அரைக்காணி முந்திரிகைக் கிழ் முக்காலே மாகாணிக் கிழ்முக்

காலே ஒருமாவும் மிருதிக் குறைமை உள்ளடங்க உண்ணிலம் ஒழிவின்றி இந்நிலத்தில் அகப்பட்ட மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் உடும்போடி ஆமைதவழ்ந்த தெப்பேர்ப் பட்டதும் காராண்மை மீகாட்சியும் புகுவழி புகவும் போதுவழி போதவும் பாயும்வழி பாயவும் வரும்வழி வரவும் இந்நிலத்தால் வந்த மன்றும் கன்றுமேய்பாழும் பெறுவதாகவும் குலையும் ஓம்பும் செய்யாததாகவும் செந்நீர்க்க கவிலை செய்யாததாகவும் இந்நிலத்தால் வந்தது மணம் புகுதவும் பிணம் போகவும் சுடு காடு பெறுவதாகவும் இந்நிலம் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மில் இசைந்த விலைப்பொருள் வேலி நூற்றுக் கழஞ்சு பொன்னாக இந்நிலத்தால்வந்த பொன் முந்நூற்று எழுகழஞ்சே ஒன்பது மஞ்சாடி இப்பொன் முந்நூற்றெழுகழஞ்சே ஒன்பது மஞ்சாடிப் பொன்னும் ஆவணக்களரியே கைச்செல்ல. அறக்கொண்டு விலைக்கு அறவிற்று பொருளறக் கொண்டு. விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் இந்நிலத்துக்கு இதுவேய் விலையாவணமும் இதுவேய் பொருள்மாவறுதிப் பொருட் சிலவோலையும் இதுவேயாகவும். இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருட்சில வோலை காட்டக் கடவரல்லாதாராகவும். இப்பரிசு கல்லு நாட்டி எல்லை தெரித்து விற்றுக்குடுத்த நிலம் இப்படியே சிலாலேகை செய்துகொள்ளப் பெறுவார்களாக. இப்பரிசு ஒட்டி விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் லோகமஹாதேவீச்வரத்து மகாதேவர் தேவகன்மிகளுக்கு திருவையாற்றுடையார் தேவகன்மிகளோம் இவைதேவகன்மி ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டு நிந்த விநோத சதுர்வேதிமங்கலத்து வதிகை மத்யஸ்தனூரான் திருப்புத்தூரடிகளேன் இவை யென்னெழுத்து. இப்பரி சொட்டி விற்றுக்குடுத்தேன். இத்தேவகன்மி ராஜேந்திர ஸிம்ஹவளநாட்டு தனியூர் ஸ்ரீகண்டராதித்த சதுர்வேதிமங்கலத்து மத்யஸ்தன் பள்ளி துறையனேன் இவையென்னெழுத்து. இப்படி அறிவேன் திருவையாற்று சிவபிராஹ்மணன் வாளுவன் குஞ்சரமல்லனையாறனேன் இவையென்னெழுத்து. இப்படி அறிவேன் திருவையாற்று சிவபிராமணன் வாளுவன் ஆரூரன் ஸ்ரீகண்டனேன் இவை

யென்னெழுத்து. இப்படி அறிவேன் இஸ்தானமுடைய சத்ய சிவபிடாரனேன். இப்படி அறிவேன் திருவையாறுடையார் சிவபிராமணன் ஆரூரனையாறனை ராஜராஜபட்டனேன். இப்படி அறிவேன் ஜநநாதத் தெரிந்த பரிவாரத்து ஒருமலூருடையான் ஆச்சர் வெண்காடனேன் இப்படி அறிவேன் திருவையாற்று சிவபிராமணன் வாளுவன் சிவபாதசித்தன் மாதேவனை ஓலோக மாதேவிபட்டனேன். இப்படி அறிவேன் திருவையாற்று கச்சன் விளையாபரணன் சர்ப்பனேன். இப்படி அறிவேன் திருவையா றுடையார் நட்டவன் மல்லனரியப்பனேன். இப்படி அறிவேன் ராஜேந்திர சிம்ஹவளநாட்டுப் பொய்கை நாட்டு தேவதானம் திருநெத்தான முடையார் காணன் தேவன் திருநாவுக்கரைய னேன். இப்படி அறிவேன் திருவையாறுடையார் காணன் பட் டாலகன் ஐயாறனேன். இப்படி அறிவேன் ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டு வெண்ணையூருடையான் மாத்தூருடையான் ஆதி. இப்படி அறிவேன் சிவபுரிச் சங்கரப்பாடியான் குட்டிமாதேவ னேன். இப்படி அறிவேன் ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டு மிறைக்கூற்றத்துத் திருப்பழனத்துத் திருப்பழன முடையார் வண்ணக்க காலாத்தான் அப்பிகண்டனேன். இப்படி அறி வேன் இராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு பொய்கை நாட்டுத் தேவ தானம் திருநெத்தான முடையார் நட்டுவன் சந்திரன் கூத்தன். இப்படி அறிவேன் ராஜேந்திர ஸிம்ஹவளநாட்டு பொய்கை நாட்டுத் தேவதானம் திருமழபாடிஉடையார் தேவவெண்காடன் இப்படி அறிவேன் ராஜேந்திர ஸிம்ஹன் இப்படி அறிவேன் சிவபுரி வியாபார........

L. உலகநாத பிள்ளை.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பதினன்காம் ஆண்டுவிழாத் தலைவர்,
மகிபாலன்பட்டி, திருவாளர், பண்டிதமணி,
மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.